விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com




சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 04 திங்கட்கிழமை (20.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 213

# ஜனாதிபதி தெரிவித்ததை வாபஸ் பெற வேண்டும்

## மகிந்தவை மைத்திரி எதிர்க்கக் கூடாது

## சுதந்திரக் கட்சிக்குள் கிளர்வு

(தம்புள்ள)

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெரு வெற்றிபெற்று ஆட்சியமைத்தாலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்த கருத்துக்கு தம்புள்ள சுதந்திரக் கட்சி அமைப்பு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதுடன் ஜனாதிபதி இக்கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிடுகின்ற மகிந்தவுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகளை கட்சித் தலைமை இனியும் மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது என தெரிவிக்கப்படுகிறது. (23ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவுக்கு அதிகார பேராசை ராஜபக்ஷவினரின் குணம் மாறவில்லை

### அமைச்சர் சம்பிக்க சாடல்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிகார பேராசை அதிகரித்துவிட்டது.

குணாதிசயங்களில் ராஜபக்ஷவினர் மாறவில்லை என அமைச்சர் சம்பிக்க ரண 24 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி எம்மைத் தூக்கி நிலத்தில் அடித்தார் - எஸ்.பி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்மைத் தூக்கி நிலத்தில் அடித்துவிட்டார் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில், மைத்திரி அண்மையில் ஆற்றிய உரையின் மூலம் எம்மைத் தூக்கி நிலத்தில் அடித்தது போன்றதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது எங்களுக்கு மிகவும் பாதகத் தன்மையை ஏற்படுத்தும்.

எனினும் கட்சியை பிளவடை 23 ஆம் பக்கம் பார்க்க














நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய பொருளாதார விருத்தியே நாட்டின் மேம்பாட்டிற்கு முக்கியம்

## மக்கள் சந்திப்பில் ரணில் கருத்து



(கொழும்பு)

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதே நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாத விடயம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் காணியுரிமைகளை உறுதிப்படுத்தும் பணியை தாம் உறுதியாக மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகியங்கனையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தகருத்தை வெளியிட்டார்.

விவசாயிகள் தன்னிடம் நிலையாக கொள்வனவு விலைகளை கோரியதாக்வும், விதை நெல்லுக்கு கட்டுப்பாட்டு விலையையும் கோரியதாக குறிப்பிட்டார்.

எனவே, கிராமிய பொருளாதாரத்திற்கு நிதியொதுக்கீடுகளை மேற்கொள்ள எண்ணியுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிராமிய பொருளாதாரத்திற்கு நிதி முதலீடு செய்யும் பட்சத்தில் அது நகரத்திற்கு வரும்.

நகர பொருளாதாரம் மேம்படும், ஆனால் நகரத்தில் முதலிட்டால் கிராமிய பொருளாதாரம் மேம்படாது எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## உளமார்ந்த நன்றிகள்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் கடந்த ஐந்து ஆண்டு காலம் தலைமைத்துவம் வகித்த காலத்தில் ஒத்துழைத்து சகல வழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி எம்மை வழிப்படுத்திய வித்வசபை சிரேஷ்ட குருமார்களுக்கும்; எமது சக நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும்; மகாசபை உறுப்பினர்களுக்கும்; நாம் சைவத் தமிழ் சமூகம் சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஆலய சமூகத்தினர்கள்; இந்து சமய அமைப்புக்கள்; அமைச்சர்கள்; பாராளுமன்ற உறுப்பினர்கள்; மாகாணசபை சமூகத்தினர்கள்; கலாசார பணிப்பாளர்கள் உத்தியோகத்தர்கள்; யாழ்.மாவட்ட அரச அதிபர்கள்; உதவி அரசாங்க அதிபர்கள்; யாழ்.மாவட்ட செயலக ஒவ்வொருதுறைசார் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள்; தவிசாளர்கள்; பிரதேசசபைகளின் உறுப்பினர்கள்; கல்வித்துறை சார் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்; அரச உத்தியோகம் பார்க்கும் அந்தணர்களது இடமாற்றம் முதலான சந்தர்ப்பங்களுக்கு ஒத்துழைத்த வடமாகாண ஆளுநர், செயலாளர் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள்; மாநகரசபை முதல்வர், ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும்;

எமது அமைப்பினை வலுப்படுத்தவும் சமூகமயப்படுத்தவும் மிகப் பெரிய துணையாக நின்ற வலம்புரி, உதயன், தினக்குரல், தினமுரசு, வீரகேசரி முதலான பத்திரிகைகளும்; டான் தொலைக்காட்சி நிறுவனும் மற்றும் இணையத்தளங்கள் அனைத்துக்கும் எமது நல்லாசிகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**
**சிவன் கோவில், சித்தன்கோணி.**
(சி-1628)

## யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்

**சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (SDC) அனுசரணையுடன்**
நடத்தும்

**இசைநாடக/ சிந்துநடைக்கூத்துப் பயிற்சிப்பட்டறைகள்**

*காலம் :*
**25.07.2015 சனி முதல் 27.09.2015 ஞாயிறு வரை உள்ள சனி, ஞாயிறு தினங்களில் பி.ப 3.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரை**

*பயிற்சி இடம்:*
**வடமராட்சியிலும் யாழ்ப்பாணத்திலும் போக்குவரத்து வசதிக்குக் கிட்டிய இடங்கள்**

- ★ அனுமதி இலவசம் (ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றலாம்)
- ★ 20 அமர்வுகள் கொண்ட 60 மணித்தியாலயப் பயிற்சியை நிறைவு செய்வோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
- ★ பயிற்சிபெறுவோரைக் கொண்டு இசைநாடகம்/காத்தவராயன் கூத்து ஆகியன தயாரிக்கப்பட்டு 4 இடங்களில் மேடையேற்றப்படும்.

(C-1624)

| | | |
|---|---|---|
| தொடர்புகளுக்கு | கலாநிதி த. கலாமணி<br>இணைப்பாளர்/ இசைநாடகம்<br>தொலைபேசி - 0779080369 | வை.விஜயபாஸ்கர்<br>இணைப்பாளர்/ சிந்துநடைக்கூத்து<br>தொலைபேசி - 0779398861 |

ஆரம்ப நிகழ்வு 23.07.2015 வியாழன் பி.ப 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகிலுள்ள புதிய உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

*கலாநிதி த. கலாமணி*
*தலைவர்*
*யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்.*

## பொதுக்கூட்டம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா 10 தினங்கள் நடைபெறவுள்ளது. திருவிழா தொடர்பான பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெறவுள்ளது. திருவிழா உபயகாரர்கள், ஏனைய உபயகாரர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு திருவிழா தொடர்பான கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (சி-1626)

**அறங்காவல் சபையினர்,**
**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்.**

## போலி விசா ஒருவர் கைது

(கொழும்பு)

போலி விசாவைப பயன்படுத்தி கட்டார் ஊடாக இத்தாலிக்கு செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் கட்டார் அதிகாரிகளால் இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.


இதன்படி இவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் இவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர் இளவாலை பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஒருவர என‌த் தெரியவந்துள்ளது.

இவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ-12)

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25-06-1944 | மறைவு 21-06-2015

## அமரர் சின்னையா கனகராசா

நாளை 21.07.2015 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

விசுவமடு மேற்கு,
விசுவமடு.

தகவல்
**குடும்பத்தினர்**

(C-1632)

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 06 . 1935



மறைவு 16 . 07 . 2015

திருமதி
## பரம்சோதி சூரியகாந்தி அம்மா

பருத்தித்துறை சந்தை மேற்கு ஒழுங்கையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரம்சோதி சூரியகாந்தி அம்மா 16.07.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - இராசரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரம்சோதியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சத்திரமூர்த்தி மற்றும் தாயுமானவர் (அவுஸ்திரேலியா), புஸ்பராணி (நோர்வே), மாணிக்கம்மா ஆகியோரின் சகோதரியும், சிறினிவாசன், விஜிதா, சுஜிதா (லண்டன்), கண்ணன் (பொதுமுகாமையாளர் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்), கிருஷ்ணா (கிச்சன், பிரான்ஸ்), ஜெயலட்சுமி ஆகியோரின் தாயாரும், இரத்தினராணி, காலஞ்சென்ற குமார் மற்றும் நவரத்தினம் (லண்டன்), சகுந்தலா, சுதாகௌரி, ஜெயபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2015) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.
0772881869, 0770783809

தகவல் :
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த மாதம் காணாமல் போன சிறுமியின் சடலம் மீட்பு

## கிளிநொச்சி குஞ்சிப்பரந்தனில் சம்பவம்





(சிவநகர்)

காணாமல் போன சிறுமியொருவர் அழுகிய நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் கிளிநொச்சி குஞ்சிப்பரந்தன் நெல்வயல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

கடந்த மாதம் 21ஆம் திகதி கிளிநொச்சி உருத்திரபுரம் எள்ளுக்காட்டுப் பகுதியினை சேர்ந்த நிருஷா (வயது 3) என்கின்ற சிறுமியொருவர் காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றினை செய்திருந்தனர். சிறுமி காணாமல் போனமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டு வந்திருந்த நிலையில் குஞ்சிப் பரந்தன் நெல்வயல் பரப்பினுள் உருக்குலைந்த நிலையில் சிறுமி ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் இருப்பதனை நெற் பயிருக்கு மருந்தடிக்க சென்ற நபர் கண்டறிந்து தகவல் தெரிவித்துள்ளார்.

காணாமல்போன சிறுமி அணிந்திருந்த ஆடை சடலத்திற்கு அருகில் காணப்பட்டதால் உயிரிழந்தது குறித்த சிறுமியாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சடலத்திற்கு அருகில் இருந்த ஆடைகளை வைத்து உறவினர்கள் அவை காணாமல்போன சிறுமி

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் பயணச்சீட்டு மகிந்தவுக்கு ரத்து - ரணில்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தின் கடவுச் சீட்டு ரத்து செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சீனா - இலங்கை வர்த்தக முதலீடுகள்

(கொழும்பு)

சீன மற்றும் இலங்கை வர்த்தகர்கள் இணைந்து இலங்கையில் முதலீட்டுடனான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டத்தினை அமுல்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின், இலங்கை -சீன வர்த்தக சபை, சீன வர்த்தக

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் முறைப்பாடுகள் 271 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 271 ஆக அதிகரித்துள்ளது.

சட்டவிரோதமாக வழங்கப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பில் அதிகபடியாக 110 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதனைத் தவிர சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் காட்சிபடுத்தப்பட்டமை குறித்தும் 35 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

பொருட்கள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் 39 முறைப்பாடுகளும் அரச சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்தியமை தொடர்பில் 35 முறைப்பாடுகளும் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைத்துள்ளன

அரச ஊழியர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுவதாகவும் ஏழு முறைப்பாடுகள் பதிவு செயயப்பட்டுள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க....

## தண்டவாளத்தை விட்டு விலகியது புகையிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இருந்து மாத்தறை நோக்கி சென்ற புகையிரதம் மதவாச்சி புகையிரத நிலையத்தில் நேற்றைய தினம் தண்டவாளத்தை விட்டு விலகியுள்ளது.

இது தொடர்பாக யாழ்.பிரதான புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபனை தொடர்பு கொண்டு கேட்ட போது,

ஞாயிற்று கிழமைகளில் மட்டும காலை 9.30 மணிக்கு யாழில

23ஆம் பக்கம் பார்க்க....



## சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு சரும நோய் எதுவுமில்லை

### சாதாரண சிறைக்கு மாற்ற நீதிபதி உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை சாதாரண கைதிகள் இருக்கும் சிறைக்கு மாற்றுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க குணதிலக்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் 16 வாகனங்களை முறைகேடாகப்



பயன்படுத்தியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சஜின் வாஸ் குணவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலின்போது யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையப பொறுப்பதிகாரி எவ்.யூ.வூட்லர் தெரிவித்தார்.

அரசியல் கூட்டங்கள் நடைபெறும் பகுதிகள், வாக்களிப்பு நிலையங்கள், வாக்கெண்ணும் நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று

23ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் அதிகாரியை தாக்கிய நான்கு நபர்கள் கைது

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணித்த சிலர், கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை வீதியில் தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கிளில பயணித்த சிலரை மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தர் அவதானித்து அவர்களை வழிமறித்து, தலைக்கவசம் அணியாமை தொடர்பில் விசாரித்துள்ளார். இதன்போது அங்கு கூடிய சிலர், மேற்படி பொலிஸ உத்தியோகஸ்தரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பலமான உட்காயங்களுக்குள்

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை; நான்காவது பேச்சுவார்த்தையில் தீர்வு

### இலங்கை மீனவர் பேரவை நம்பிக்கை

(கொழும்பு)

நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கும் என இலங்கை மீனவர் பேரவை நிர்வாகி ஹெர்மன் குமார தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது, இலங்கை - இந்திய மீனவர்கள் இடையே ஏற்கெனவே 3 சுற்று பேச்சுவார்த்தை முடிந்துள்ளன. இன்னும் இருதரப்பு மீனவர்களிடையே நம்பகத்தன்மையை தீவிரமாக உருவாக்க வேண்டும்.

இரு நாட்டு மீனவர் பிரச்சினையில் கடற்படைகள் தலையிடுவதை இலங்கை மீனவர்கள் ஏற்கவில்லை. இந்திய அரசு இப் பிரச்சினையில் மேலும் தீவிரம் காட்டவேண்டும். இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழக மீனவர்கள் இழுவை

23ஆம் பக்கம் பார்க்க....

## உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு கட்டணத்தை செலுத்தத் தயார்

### பிரசார கூட்டத்தில் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தன்னால் பயன்படுத்தப்படும் இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயின் அது குறித்து உடனடியாக அறிய தருமாறு முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. அபேகோனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



நேற்று முற்பகல் அந்த கோரிக்கையை விடுத்ததாகவும் அவர்

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச துறை போல் தனியார் துறையும் மேம்படுத்தப்படும் -ஜனாதிபதி



அரச துறையினை பலப்படுத்துவதைப் போன்று அனைத்து பிரிவுகளிலும் உள்ள தனியார் துறைகளையும் மேம்படுத்துவது அரசின் கொள்கையாகும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

Dialog Axiata நிறுவனத்தின் புதிய கட்டிடத்தை கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கட்டிடம் கொழும்பு -10 யூனியன் பிளேஸ் டயலொக் தலைமை நிலைய வளாகத்தில் அமைந்துள்ளது.

டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி ஹென்ஸ் விஜயசூரிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வர்த்தக உலகம்

### ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# மக்கள் வங்கியின் பசுமையான வங்கி முறைமை

மக்கள் வங்கி, நவீனத்துவத்தின் மற்றுமொரு படிமுறையை முன்னெடுத்து வைக்கும் முகமாக, இந்நாட்டு இளம் சந்ததியினருக்குப் பசுமையான வங்கித்துறையின் கதவுகளைத் திறக்கிறது. இதற்கமைய, மக்கள் வங்கியின் Yes கணக்கு ஊடாக, பசுமையான வங்கித் துறையின் விசேடத்துவத்தை நீங்கள் இப்போது உணர்ந்து கொள்ளலாம். புதிய தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறையின் வளர்ச்சி மூலம், வங்கி அலுவல்களில் ஈடுபடும்போது, சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளைக் குறைத்து, சூழலின் சமநிலையைப் பாதுகாக்கும் நோக்குடன், பசுமையான வங்கிச் சேவை என்ற எண்ணக்கரு உருவானது.

மக்கள் வங்கியின் Yes கணக்கு ஊடாக, இந்த பசுமையான வங்கிச் சேவை என்ற எண்ணக்கரு இலங்கை வங்கித்துறையில் இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தும் முதல் தடவை இதுவாகும். இதன் ஊடாக, கணக்குப் புத்தகம் மற்றும் அச்சிடப்பட்ட வங்கிக் கூற்றுக்கள் இன்றி மின்னஞ்சல் வாயிலாக வங்கிக் கூற்றுக்கள் அனுப்பி வைக்கப்படும். அத்துடன், மக்கள் வங்கியின் Yes கணக்கு உரிமையாளர்களுக்கு, இலவசமாக பீப்பள்ஸ் மொபைல் பாங்கிங் மற்றும் பீப்பள்ஸ் நெற் இணையத்தள வங்கிச் சேவைகள் வழங்கப்படுவதன் காரணமாக, நாளின் எந்தவொரு வேளையிலும், எந்தவொரு இடத்திலிருந்தும், கையடக்கத் தொலைபேசி அல்லது கணினி மூலம் வங்கி அலுவல்களை மேற்கொள்ள முடியும். இந்த பீப்பள்ஸ் மொபைல் பாங்கிங் மற்றும் பீப்பள்ஸ் நெற் இணையத்தள வங்கிச் சேவை ஊடாக வங்கி நிலுவையைப் பரீட்சித்தல், ஏனைய விடயங்களை அறிந்து கொள்ளல், பணப் பரிமாற்றம், பில் கட்டணங்களைச் செலுத்துதல், வங்கிக் கூற்றுக்களைக் கோருதல் போன்ற பல சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

பீப்பள்ஸ் கிரடிட் காட் மூலம், இரவு பகலாகச் செயற்படும் மக்கள் வங்கியின் 450க்கும் அதிகமான ATM இயந்திர வலையமைப்பு மற்றும் Lanka pay வலையமைப்புக்கு உரித்தான 2300க்கும் அதிகமான ATM



இயந்திரங்கள் மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பசுமையான வங்கி முறைமை பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள www.peoplesbank.lk என்ற இணைத்தளம் ஊடாக பிரவேசித்து பெற்றுக் கொள்ள முடியும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6984.12 | 7,161.96 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,905.27 | 4,013.75 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 5,248.733 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** கேஹோல்(139.30),பிமுத் பினான்ஸ்(64.30), புளூ டைமன்ட்ஸ்(1.50),ஹேலீஸ் பைபர்(45.80),எல்பிட்டிய(23.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எல்பி பினான்ஸ்(115.20), அஸ்ஹோட் ஹோல்டிங்(W) (24.20),பியூப்பிள் மேர்ச்(22.90),பிசி பார்மா(1.00), பிண்லேஸ் களம்பு(275.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# கிரீடத்தை இழக்கும் கிரீஸ்




உலகின் தலைசிறந்த காவியங்கள் எழுதியவர் ஹோமர், மேற்கத்திய தத்துவத்தின் பிதாமகன் என்று இன்றளவும் கருதப்படுபவர் சாக்ரடீஸ், குளியல் அறையிலிருந்து, 'யுரேகா, யுரேகா' என்று கத்தியபடி ஓடிவந்த ஆர்கிமிடிஸின் அறிவியல் விதிகளை மாணவர்கள் அறிவார்கள். இவர் ஒரு தலைசிறந்த வானியல் நிபுணரும் கூட. மேலே குறிப்பிட்ட அத்தனை சாதனையாளர்களும் கிரீஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆங்கிலத்துக்கும், அறிவியலுக்கும் எண்ணற்ற வார்த்தைகளை நன்கொடையாக அளித்துள்ள மொழி கிரேக்கம்.

இப்படிப் பலவிதங்களில் மணிமுடி சூட்டிக் கொண்ட கிரீஸ் இன்று உலக அளவில் தலைகுனிந்து நிற்கிறது. பொருளாதார நெருக்கடியில் திவாலாகும் நிலைக்கு அது வந்து விட்டது.

பெருங்காயமாய் கிரீஸ் உலக அரங்கில் மணத்துடன் வலம் வந்த நாட்கள் உண்டு. பெரும் காயத்துடன் இன்று அது தள்ளாடும் காட்சி விசனத்துக்கு உரியதுதான்.


'ஐரோப்பாவின் நோயாளி' என்று துருக்கியைத்தான் சொல்வார்கள். ஆனால் இன்றைய நிலையில் கிட்டத்தட்ட கோமா கட்டத்தில் இயங்குகிறது கிரீஸ். அப்படி ஒரு பொருளாதாரச் சிக்கல்.

வங்கிகளுக்கெல்லாம் விடுமுறை. பங்குச் சந்தை மூடப்பட்டது. ஏ.ரி.எம்களை வைத்துக் கொண்டு பணத்தை எடுத்துக் கொள்வதில் கட்டுப்பாடுகள்.

என்ன நடந்தது கிரீஸில்? என்ன நடக்கிறது அந்த நாட்டில்?

அமெரிக்க பங்குச் சந்தையின் தாயகமான வோல் ஸ்ட்ரீட் 2008ல் சரசரவென சரிந்தது. அங்கு சீர்குலைந்த பொருளாதாரப் பிரதிபலிப்பு கிரீஸில் வெகு பயங்கரமாகவே வெளிப்பட்டது.

ஒக்டோபர் 2009ல் கிரீஸ் அரசு வெளியிட்ட ஒரு வாக்குமூலம் உலகெங்கும் அதிர்வலைகளைக்




ஏதென்ஸில் பூட்டியுள்ள கிரீஸ் தேசிய வங்கிக்கு முன்பு காத்திருக்கும் ஓய்வூதியதாரர்.

கிளப்பியது.

'பல வருடங்களாகவே நாங்கள் எங்கள் நாட்டின் நிதி நிலைமையை பொய்யாகத்தான் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். நாங்கள் வெளியிட்டதைவிட எங்கள் நாட்டு பட்ஜெட்டில் பற்றாக்குறை மிக அதிகம்தான்'.

அவ்வளவுதான், கிரீஸ/டன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். எச்சரிக்கை மணி பலமாகவே ஒலித்தது. கிரீஸ/க்கு கடன் கொடுக்கும் அமைப்புகள் ஒவ்வொன்றாகத் தங்கள் கதவுகளை மூடிக் கொள்ளத் தொடங்கின.

வளரும் நாடுகள் கடன் பெறுவது சகஜம்தான்(ஏன், நாம் மட்டும் கடன் வாங்கவில்லையா என்ன?) ஆனால் கிரீஸின் நிதி நெருக்கடி மேலும் கடுமையானது. அது தன் கடன்காரர்களுக்கு செலுத்த வேண்டிய தவணைத் தொகையை செலுத்த முடியாமல் தவிக்கிறது.

கிரீஸின் கடுமையான பொருளாதாரச் சிக்கலை சரி செய்ய 3 அமைப்புகள் உதவிக்கரம் நீட்டின. அவை பன்னாட்டு நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய யூனியன். 240 பில்லியன் யூரோக்களை கடனாக இவை அளித்தன.

ஆனால் இவ்வளவு பெரிய தொகையை சும்மாவா கொடுக்கும்? நிபந்தனைகள் விதித்தன. 'உங்கள் நாட்டின் நிதி நிலைமையைச் சரி செய்ய நீங்கள் கடுமையான நடவடிக்கைளை எடுக்க வேண்டும். வரி விகிதத்தை மிகவும் அதிகமாக்க வேண்டும். வரி ஏய்ப்பு நிகழாமல் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உங்கள் நாட்டில் ஓய்வு பெறுவதற்கான வயது 57 ஆக இருக்கிறது. இதை மேலும் 10 வருடங்களுக்கு நீட்டிக்க வேண்டும். இதன் மூலம் வயதானவர்களுக்கு அரசு அளிக்கும் மானியத் தொகையை கணிசமாகக் குறைத்துக் கொள்ளலாம். வெளிநாடுகள் கிரீஸ/டன் வணிகம் செய்வதற்கு வசதியான சூழல்களை கிரீஸ் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்".

எப்படியோ கோடிக்கணக்கான யூரோக்கள் கிரீஸ் நாட்டுக்கு வந்து சேர்ந்தன. பிறகென்ன என்கிறீர் களா? இது சமுத்திரத்தில் கரைத்த உப்பு போல ஆனது. கிரீஸ் நாட்டின் பொருளாதாரம் நான்கில் ஒரு பங்கு வீழ்ச்சி கண்டது. வேலையில்லாத்திண்டாட்டம் என்பது 25 சதவீதம் அதிகமானது.

ஏற்கெனவே ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிடம் எக்கச்சக்கமாக கடன் வாங்கியிருந்தது கிரீஸ். அதற்கான கெடு திகதிகள் ஏற்கெனவே கடந்திருந்தன. இப்படி பிற நாடுகளில் வாங்கிய கடனை (அதாவது கடனில் ஒரு பகுதியை) அடைப்பதற்கே அத்தனை யூரோக்களையும் செலவிட்டது கிரீஸ். பிறகு எப்படி வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் கிடைக்கும்?

வேறொரு காரணமும் உண்டு. இடதுசாரி எண்ணங்கள் கொண்டவர் கிரீஸ் நாட்டின் பிரதமர். பொருளாதார மேம்பாடு என்கிற பெயரில் மக்களை கசக்கிப் பிழிய அவருக்கு மனத்தடைகள் இருந்தன. அதைவிட முக்கியமாக இப்படியெல்லாம் செய்தால் அது எதிர்கட்சிகளுக்குச் சாதகம் ஆகிவிடும் என்கிற பயம் வேறு.

கிரீஸ் மக்கள் அதிர்ச்சியின் எல்லைகளைத் தொட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நாட்டின் பணவீக் கத்தால் நொந்துபோய் இருக்கும் அவர்கள் மேலும் என்னென்ன வரிகளைக் கட்ட வேண்டி இருக்குமோ என்ற திகைப்பில் இருக்கிறார்கள்.

யூன் மாதமே பன்னாட்டு நிதியத்துக்கு ஒன்றரை பில்லியன் யூரோ தொகையை கிரீஸ் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் கடும் நிதி நெருக்கடி காரணமாக கிரீஸ் இதைச் செய்யவில்லை. தங்களுக்குக் கடன் கொடுத்த அத்தனை அமைப்புகளிடமும், நாடுகளிடமும், கடனைத் திருப்பித் தரும் திகதிகளை மேலும் மேலும் தள்ளிப் போடச் சொல்கிறார் கிரீஸ் பிரதமர். இரண்டு வருட அவகாசம் கேட்கிறார். ஐரோப்பிய மத்திய வங்கிக்கு இதை ஏற்பதில் சில சிக்கல்கள் உள்ளன.

ஏ.ரி.எம்.களில் பணம் பெறவும் கட்டுப்பாடு. மிகவும் குறைந்தபட்சத் தொகையைத்தான் அப்படி எடுத்துக் கொள்ள முடியும்

மக்கள் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். ஓய்வூதியத்தைக் கூட பெற முடியாமல் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

இதேவேளை, கிரீஸ் நாட்டின் பிரதமர் அலெக்ஸிஸ் சிப்ராஸ் இந்த வருடம் ஜனவரி 26அன்றுதான் பிரதமராக பதவியேற்றார். ஐயோ பாவம்! அதற்குள் கிரீஸின் நிலைமை பொருளாதார கோமாவுக்குச் சென்றுவிட்டது. சிவில் பொறியாளரான சிப்ராஸினால் கிரீஸ் என்ற மாபெரும் கட்டிடத்தைச் செப்பனிட முடியவில்லை.

பிரதமர் ஆனவுடன் தான் கூட்டிய முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் தன்னுடைய முன்னுரிமைகளை இவர் தெளிவாக விளக்கினார். முதலில் கிரீஸில் உள்ள மனித உரிமைமீறல்களுக்கு முடிவு கட்ட வேண்டும். அடுத்து கிரீஸ் பட்டுள்ள பிரம்மாண்டமான கடனைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை களை மேற்கொள்ள வேண்டும். மூன்றாவதாக முந்தைய அரசின் தனியார் மயமாக்கல் கொள்கைகளுக்கு முற்றுப் புள்ளிவைப்பதோடு ஏற்கெனவே நடைபெற்ற சில தனியார் மயங்களையும் வாபஸ் பெறவேண்டும்.

ஆனால் இவற்றில் 2-வது பிரச்சினை பூதாகரமாக எழுந்து நின்று மற்ற இரண்டையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

(மிகுதி அடுத்த வாரம்...)

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.15 | 135.35 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 205.79 | 212.28 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 143.04 | 148.22 |
| சுவிஸ் பிராங் | 137.14 | 142.37 |
| கனேடிய டொலர் | 101.27 | 105.12 |
| அவுஸ்திரேலிய டொலர் | 97.05 | 101.23 |
| சிங்கப்பூர் டொலர் | 96.28 | 99.66 |
| ஜப்பான் யென் | 1.05 | 1.09 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.42 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கர குண்டு வெடிப்பில் 120 பேர் உடல் சிதறிப்பலி!

## 130 பேர் படுகாயம்



(பக்தாத்)

**மக்கள் அதிகளவில் கூடும் ஈராக் சந்தையில் இடம்பெற்ற சக்தி வாய்ந்த பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 120 பேர் உடல் சிதறிப் பலியான அதேவேளை 130 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

அமெரிக்க தாக்குதல்களை நடத்தி உலகையே அதிர்ச்சியில் உறைய வைத்த அல்கொய்தா தீவிரவாதிகளை விட பயங்கரமானவர்கள் என அமெரிக்காவையே அலற வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், ஈராக் நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அந்த நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு நகரங்களை அவர்கள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

அடிக்கடி தற்கொலைப் படை தாக்குதல்களை நடத்தி பீதியையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அங்குள்ள தியாலா மாகாணத்தில், கான்பானி சாத் சந்தையில் ரமழான் பண்டிகையை முன்னிட்டு கடந்த (வெள்ளிக்கிழமை) மக்கள் திரளாக கூடி வந்து, தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்குவதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது தற்கொலைப் படை தீவிரவாதிகள் ஒரு லொறி நிறைய வெடிகுண்டுகளை நிரப்பி வந்து வெடிக்க செய்தனர். இந்த பயங்கர குண்டுவெடிப்பால் அந்த பகுதியே அதிர்ந்தது. கட்டடங்கள் சேதம் அடைந்தன. புகை மண்டலம் உருவானது. மக்கள் உயிர் பிழைப்பதற்காக அலறிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடினர். எங்கு பார்த்தாலும் உடல் உறுப்புகள் சிதறி கிடந்தன. சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் என்பதால் வெடித்து சிதறிய போது ஏற்பட்ட அழுத்தத்தால், பலியானவர்களின் உடல் பாகங்கள் அந்த பகுதியில் உள்ள கட்டடங்களின் கூரைகளில் சிதறிக்கிடந்தன.




**120 இற்கும் மேற்பட்டோர் பலி**

தகவல் அறிந்ததும் மீட்புப்படையினர் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினர்.

இந்த கொடிய சம்பவத்தில் 120 இற்கும் மேற்பட்டோர் உடல் சிதறி உயிரிழந்ததாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலியான குழந்தைகளின் உடல் பாகங்களை காய்கறிகள் வைக்கப்பட்டிருந்த பெட்டிகளில் சேகரித்தனர். இது நெஞ்சை நொறுக்குவதாக அமைந்தது.

இந்த பயங்கர சம்பவத்தால் மக்கள் ஆத்திரமும், வேதனையும் அடைந்தனர். வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்களின் கண்ணாடிகளை உடைத்தெறிந்தனர்.

இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியான காட்சிகள், சம்பவ இடத்தில் தீப்பற்றி எரிவதையும், உடல் பாகங்கள் சிதறிக்கிடந்ததையும், அந்த பகுதியே போர்க்களம் போல காணப்பட்டதையும் காட்டின.

தியாலா பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறும் போது, "இந்த குண்டுவெடிப்பில் மீட்பு பணிகள் இன்னும் முடிவுக்கு வந்து விடவில்லை. மீட்பு படையினர் இன்னும் உடல் பாகங்களை சேகரித்து கொண்டிருக்கின்றனர். பலி எண்ணிக்கை இன்னும் உயரக்கூடும்" எனத் தெரிவித்தார்.

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்பு**

இந்த கொடூர சம்பவத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றனர். இதுதொடர்பாக அவர்கள் 'டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் விடுத்துள்ள செய்தியில், "ஈராக்கின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ஹவாஜா நகரில் சன்னி பிரிவினர் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் விதமாக கான்பானி சாத் சந்தை குண்டு வெடிப்பு நடத்தப்பட்டது (இந்த பகுதி ஷியா பிரிவினர் வாழ்கிற பகுதி). 3 தொன் வெடி குண்டுகளை வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது" என கூறப்பட்டுள்ளது.

ஈராக்கில், அண்மைக் காலத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள் நடத்திய தாக்குதல்களில் மிக கொடியது இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கலிபோர்னியா தீவிபத்தில் வாகனங்கள் நாசமாகின

(கலிபோர்னியா)

கலிபோர்னியாவின் தென் பகுதியில் உள்ள இன்டர்ஸ்டேட் - 15 என்ற நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள வனப்பகுதியில் தீப்பிடித்து, அந்தத் தீ நெடுஞ்சாலையிலும் பரவியதால் பல வாகனங்கள் தீயில் கருகின.

இந்தத் தீயின் காரணமாக, கயோன் கணவாயில் உள்ள நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த 20 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன.

வார இறுதியில், பெரும் போக்குவரத்து இருக்கும் நேரத்தில் இந்தத் தீ விபத்து நடந்தது. "தீயினால், கார்களின் டயர்கள் வெடிக்கும் ஓசைகளை, தொடர்ந்து கேட்க முடிந்தது" என்கிறார் அந்தப் பகுதியில் வாகனத்தை ஓட்டிச் சென்ற லான்ஸ் அண்ட்ரேட்.



இந்த விபத்தின் காரணமாக யாருக்கும் காயம் ஏற்பட்டதா என்பது இன்னும் தெரியவில்லை.

ஹெலிகொப்டர்களிலிருந்து எடுக்கப்பட்ட காட்சிகளில், மக்கள் தீ விபத்து நடந்த இடத்தை விட்டு, முகத்தை மூடியபடி வெளியேறும் காட்சிகளைப் பார்க்க முடிந்தது.

இந்தத் தீ விபத்தின் காரணமாக பல வீதிகள் மூடப்பட்டதால், பல கிலோ மீற்றர் தூரத்திற்கு வாகனங்கள் தேங்கின.

பல வாகனங்களின் உரிமையாளர்கள், தங்கள் வாகனங்களை அங்கேயே நிறுத்தி விட்டுச் சென்றுவிட்டனர். இவற்றில் பல முழுமையாகத் தீயில் நாசமாயின.

தங்கள் வாகனங்களை விட்டு வெளியேறுபவர்கள், கார்களிலேயே சாவிகளை வைத்துவிட்டுச் செல்லும்படி தீயணைப்பு வீரர்கள் கேட்டுக் கொண்டனர்.

தீயினால் ஏற்படுத்தும் புகையைக் கட்டுப்படுத்த விமானம் மூலம் இரசாயனம் தூவப்பட்டு வருகிறது.

இந்த இன்டர்ஸ்டேட் - 15 என்ற நெடுஞ்சாலை, லாஸ் ஏஞ்சலீஸையும் நெவடாவையும் இணைக்கிறது. கலிபோர்னியாவின் தென் பகுதியில் வசிப்பவர்கள் லாஸ் வேகாஸிற்கு இந்தச் சாலை வழியாகத்தான் செல்வார்கள் என்பதால், வார இறுதிகளில் இந்த வீதி மிகவும் நெரி சல் மிக்கதாக இருக்கும்.

கலிபோர்னியாவில் காட்டுத் தீ என்பது அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக நிலவும் கடும் வறட்சியின் காரணமாக, இதன் தீவிரம் அதிகரித்திருக்கிறது. (இ-7)

## தீவிரவாதிகள் 431 பேர் கைது

ஈராக் மற்றும் சிரியாவில் தடம் பதித்துள்ள ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதிகள் இயக்கம், அரபு நாடுகளில் காலூன்ற முயற்சித்து வருகிறது. இதனை முறியடிக்க அந்த நாடுகள் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் சவுதி அரேபிய அரசு கடந்த சில வாரங்களாக தீவிர நடவடிக்கை எடுத்து, அங்குள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் அமைப்பை கண்டுபிடித்து முறியடித்தனர்.

ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்துடன் தொடர்புடைய 431 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் ஷியா பிரிவு முஸ்லிம்களின் மசூதிகள், தூதரகங்கள் மீது நடக்க இருந்த வெடி குண்டு தாக்குதல் மற்றும் சதித் திட்டங்கள் முறியடிக்கப்பட்டு விட்டதாக சவுதி அரசின் உள்துறை அமைச்சர் தகவல் வெளியிட்டார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 பவுண் தங்க நகைகள் மட்டுவில் பகுதியில் திருட்டு

(சாவகச்சேரி)

**உயிருக்கு அஞ்சி 14 பவுண் நகைகளை திருடர்களிடம் பறி கொடுத்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி மட்டுவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.**

இத்திருட்டுச்சம்பவம்தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சம்பவத்தினத்தன்று தகப்பன், மகள் மாத்திரம் தனியாக இருந்துள்ளார்கள்.

இதன்போது இரவு 11.30 மணியளவில் வீட்டின் பின்புறமுள்ள கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் தொலைக்காட்சியினை பார்த்துக் கொண்டிருந்த குறித்த தந்தை, மகள் இருவரையும் கோடரி மற்றும் கத்தியினை காட்டி மிரட்டியுள்ளனர்.

இதற்குஅஞ்சியுள்ளதந்தை, மகள் இருவரும் வீட்டை விட்டு ஓடியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திருடர்கள் அலுமாரியை உடைத்து நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் வீட்டை விட்டு வெளியேறியதை மறைமுகமாக இருந்து பார்த்த தந்தை, மகள் இருவரும் வீட்டினுள் சென்று பார்த்த வேளை திருடர்கள்நகைகளைதிருடிச்சென்றுள்ளதை அறிந்துள்ளனர்.

அதன்போது அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 22 பவுண் நகைகள் மற்றும் தங்கம் பூசப்பட்ட போலி நகைகள் என்பன திருடர்களால் திருடிச்செல்லப்பட்டதை அறிந்துள்ளனர்.


அதில் 8 பவுண் நகைகள் வீதியில் வீசப்பட்டதுடன் 14 பவுண் நகைகளை மாத்திரம் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர் என பின்னர் தெரியவந்துள்ளது.

அத்துடன் போலி நகைகளும் அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் வீசப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-29)

# 3 விபத்துக்களில் 15 பேர் படுகாயம்





மூன்று வெவ்வேறு விபத்துக்களில் நேற்றையதினம் 15 பேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


நேற்றையதினம் கிளிநொச்சியில் இருந்து யாழ்.நோக்கி வேலை ஆட்களுடன் வந்து கொண்டிருந்த சிறியரக கன்ரர் வாகனம் ஒன்று யாழ். மடத்தடிப் பகுதியிலுள்ள தண்ணீர் தாங்கிக்கு அருகாமையில் மின்கம்பத்துடன் மோதுண்டதில் அதில் பயணம்செய்த 13 பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பூநகரி சங்குப்பிட்டி வீதியில் எதிரெதிரே வந்தமோட்டார்சைக்கிள்மோதுண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டதுடன் மற்றைய பெண் ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் யாழ். நீதிமன்றத்திற்கு அருகாமையில்கூலர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிளை மோதியதில் மீன் வியாபாரி ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

# நோன்புப் பெருநாள்



(யாழ்ப்பாணம்)

இஸ்லாமியர்களின் விசேட வணக்க வழிபாடான (ஈதுல் பித்ர்) நோன்புப் பெருநாள்"நபி வழியில் நம் தொழுகை" என்ற தொனிப்பொருளில் யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் உள்ளக மைதானத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப் பெருநாள் தொழுகை காலை 6.45 மணி அளவில் ஆரம்பமாகியது. இதில் யாழ்.வாழ் முஸ்லிம்களில் இருநூற்று ஐம்பதிற்கும் அதிகமான ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் தௌஹித் மர்க்கஸ் பள்ளிவாயலின் தலைவரும் - யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பிரதி அதிபருமான மௌலவி எம். ஏ.பைசர் (மதனி) நோன்புப் பெருநாள் தொழுகையின் முக்கியத்துவத்தையும் பெருநாள் தொழுகைநபி ஸல் அவர்கள் காலத்தில் எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பது பற்றி சிறுவிளக்கமளித்தார். (இ-3-9)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் Ayush (ஆயுள் வேதம், யோகா, யுனானி, சித்தமருத்துவம், கோமியோபதி) புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ். இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை உயர் கல்வியமைச்சினுடனான கலந்துரையாடலுக்கு அமைவாக 2015 - 16 கல்வியாண்டுக்கு விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தில் தங்குமிடவசதி, மருத்துவச் செலவு என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை இலங்கை உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னதாக இலக்கம் 18, உயர் கல்வியமைச்சு, வோட்பிளேஸ், கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.mohegov.lk என்ற முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு www.indianmedicine.nic.in என்ற இணையத்தள முகவரிக்கு செல்ல முடியும். (இ-3-9)




# இசை நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க துதரகத்தின் அனுசரணையுடன் Jazz இசை நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.4 மணி தொடக்கம் 4.45 மணிவரை உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட இசைக் கலைஞர் கொற்றி கொக்றெல் Coty Cockrell தலைமையில் இந்த இசைநிகழ்வுநடைபெறவுள்ளது.

Jazz பயிற்சிப் பட்டறையின் தொடக்க நிகழ்வாக இந்த நிகழ்வுநடைபெறவுள்ளது.(இ-3)

# பயிற்சிப் பட்டறைகள்

யாழ்ப்பாணம்நாட்டார்வழக்கியற் கழகம் சுவிஸ் அபிவிருத்திக்கூட்டுத்தாபன அனுசரணையுடன்நடத்தும்இசைநாடகசிந்து நடைக்கூத்துப் பயிற்சிப் பட்டறைகள் யாழ். நகர்ப்பகுதி, வடமராட்சியிலும் உள்ள போக்குவரத்து வசதி கூடிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமைபிற்பகல்4.30 மணிக்குயாழ்ப்பாணம்ஆரியகுளம் சந்திக்கு அருகிலுள்ள புதிய உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும்25 ஆம்திகதி தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறவுள்ளது. முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிப்பட்டறைகளில் ஆர்வமுள்ள அனைவரும் பங்கு கொள்ள முடியும்.

இதன்போது 20 அமர்வுகள் கொண்ட 60 மணித்தியாலயப் பயிற்சியை நிறைவு செய்வோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பயிற்சி பெறுவோரைக் கொண்டு இசை நாடகம், காத்தவராயன் கூத்து என்பன தயாரிக்கப்பட்டு 4 இடங்களில் மேடையேற்றப் படவுள்ளது. (இ-5)

# நீண்டகால குத்தகைக்கு குருகுலக்கட்டடம் கிடைத்தது இந்துக் குருமார்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியே

## வாசுதேவக்குருக்கள் தெரிவிப்பு

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் குருகுலக் கட்டடம் நீண்டகால குத்தகைக்கு கிடைத்தது. இது இந்து குருமார்களுக்கு கிடைத்த பெரும் வெற்றி என யாழ்ப்பாணம் சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் உப தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் தெரி வித்துள்ளார்.இது தொடர் பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச இந்து மத.குருமார் ஒன்றியத்தின் குருகுலக் கட்டடம் 2013 ஆம் ஆண்டில் இருந்து இந்து கலாசார திணைக்களத்தின் முழுமையான பொறுப்பில் உள் வாங்கப்பட்டது.

கடந்தகாலத்தில் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனால் குருகுலம் குருமார்களுக்கென சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டதனால் அதனை நாம சுதந்திரமாக வும் அதிகாரபூர்வமாகவும் பயன்படுத்த முடியாத சூழல் காணப்பட்டது.

இக்கட்டடத்தினை எமக்கு உரியதாக்க முன்னர் பலகடிதங்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ர்ாஜபக்ஷ விடமும் எமக்கு முன்பிருந்த நிர்வாகத்தினர் கையளித்திருந்தனர்.

ஆனால் பலன் ஏற்படவில்லை. மேலும் வித்வசபை உறுப்பினரில் ஒருவராகத் திகழும் சிவஸ்ரீ கை.வாமதேவக்குருக்கள் தான்100 குருமார்களை அழைத்துக்கொண்டு ஜனாதிபதியுடன் சந்திகக ஏற்பாடு செய்து தருவதாக வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் அதுவும் நடைபெறவில்லை.

இந்நிலையில் இந்து கலாசார அமைச்சர் சுவாமிநாதனிடம் திரு மதி. வி.மகேஸ்வரன் எமது கோரிக்கையை கடிதமமூலமாகவும்நேரடியாகவும் தெரிவித்தார்.

அதன் பலனாக இன்று எமக்கு நீண்ட காலகுத்தகை அடிப்படையில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குருமார்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். எமக்கு சுதந்திரமாக வும் காத் திரமாகவும் பணி களை ஆற்றுவதற்கு குரு குலகட்டடம் எமக்கு கிடைபபதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் எமதுமனம் நிறை ந்த நன்றி களை தெரிவித்துக் கொள் கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசில் இணைய அவசியமில்லை!

## மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணிக்கு தேசிய அரசாங்கத்தில் இணைவதற்கு அவசியமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கல்கமுவ பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றமக்கள் சந்திப்பில் கலந்து கொணடு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்று தேசிய அரசாங்கம் குறித்து நம்பிக்கையற்றவர்கள் இன்று அதனை குறித்து தொடர்ந்து பேசுகின்றனர்.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணிக்கு தேசிய அரசாங்கத்தில் இணைவதற்கான எவ்வித அவசியமும் கிடையாது. இம்முறை பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி 117 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேசத்தின் தேவைக்கமைய ஜனாதிபதி செயற்படுகின்றாராம்

## குற்றஞ்சாட்டுகிறார் திஸ்ஸ



(கொழும்பு)

இந்நாட்டின் தற்போதைய அரசியலுக்கு சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரித்து காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கமைய இலங்கை அடிமை நாடாகியுள்ளதாகவும், நாடு முழுவதும் அராஜகமான நிலைமையை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி சர்வதேசத்தின் தேவைக்கமைய செயற்படுவதாக குறிப்பிட்ட திஸ்ஸ அத்தநாயக்க, எதிர்வரும் தேர்தல் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ரயில் மோதி 6 பேர் பலி!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள மிட்டியாரி மாவட்டத்தில் நேற்று தண்டவாளத்தை கடக்க முயன்றகாரின்மீது வேகமாக வந்த ரயில் மோதிய விபத்தில் ஆறு பேர் பரிதாபமாக பலியாகினர்.

இங்குள்ள ஜஸ்கானி புதாக் பகுதியில் உள்ள ஆளில்லா ரயில்வே கடவை வழியாக தண்டவாளத்தை அந்த கார் கடக்க முயன்றபோது, அதே தண்டவாளத்தின் மீது வேகமாக வந்த ஒரு ரயில் கார்மீது பயங்கரமாக மோதியது.

சில மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட அந்த காரின் பெரும்பகுதி ரயில் சக்கரத்தின் அடியில் சிக்கி நசுங்கியது. காரில் பயணம் செய்த ஆறு பேரும் உடல் நசுங்கி, சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பலியாகினர்.

அவர்கள் அனைவரும் டண்டோ அல்லாஹ்யார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கராச்சி நகரை நோககி சென்று கொண்டிருந்தபோது இந்தக் கொடூர விபத்து நிகழ்ந்ததாகவும் தெரியவந்துள்ளது. (இ-7)

## 2010 இல் வழங்கிய வாக்குறுதிகளை மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்றவில்லை

### மங்கள சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க போவதாக வாக்குறுதி வழங்கிய போதிலும் அவர் அதனை நிறைவேற்றவில்லை என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதாக தற்போதைய பிரதமர் வழங்கிய வாக்குறுதியை அப்படியே நிறைவேற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தறை ஹக்மன பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற போது மாநாயக்கர்கள் உட்பட பௌத்த பிக்குமார் முன்னிலையில் தனது மார்பில் அடித்து கொண்டு தனக்கு பொய் சொல்லும் பழக்கமில்லை, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் அரச ஊழியர்களின் சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிப்பதாக மகிந்த தெரிவித்தார்.

தேர்தலில் வென்றார், சரத் பொன்சேகாவை இழுத்துச் சென்று சிறையில் தளளினார். மகிந்த நிறைவேற்றிய வாக்குறுதிகள் எதுவுமில்லை.

எமது கட்சியின் தலைவர் பிரதமராக பதவியேற்று புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி 60 நாட்களுக்குள் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தார் எனவும் மங்கள சமர வீர மேலும் தெரிவித்தார். (இ-7)

## தீர்த்தக்கேணி அங்குரார்ப்பணம்

வடமராட்சி வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய "பூவற்கரையான் புட்கரிணி" தீர்த்தக்கேணி அங்குரார்ப்பண விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மு.ப.10 மணிவரை நடை பெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு கிரியா ரத்தினம் சிவஸ்ரீ வை.இராஜேஸ்வரக்குருக்கள், ஆலய நித்திய குரு சிவஸ்ரீ சி.கோகுலன் ஐயர் மற்றும் பல சிவாச்சாரியார்கள் இணைந்து நடத்தும் இக் கிரியா நிகழ்வைத் தொடர்ந்து ஒன்றுகூடல் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் சி.பத்மராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சோ.கோகுலதாசன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் வடமராட்சி தெற்குமேற்குப்பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு, கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செ.பு குமார் மற்றும் அயற் கிராம ஆலயங்களின் பரிபாலன சபைத் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## போக்குவரத்து நடைமுறைகள் தொடர்பாக டெனீஸ்வரன் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தலைமையில் வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை யாழிலுள்ள வடமாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் போக்குவரத்து ஒழுங்குகளை மக்களுக்கு ஏற்புடைய வகையில் வழங்குவதற்காக ஏற்கனவே இருந்து வந்த 60:40 நேர சூசிகளை மாற்றி அமைக்கும் திட்டத்தின் கீழ் மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் அரச அதிபர்களின் தலைமையின் கீழ் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை உறுப்பினர்கள், மாவட்டச் செயலக போக்குவரத்து சபை அதிகாரிகள் இணைந்து விசேட குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் தனியார் சங்கத் தலைவர்களை சந்தித்து எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் தமக்குரிய நேர அட்டவணைகளை தயாரித்து உறுதிப்படுத்திய பின்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என சங்கத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேர அட்டவணைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் சட்ட திட்டங்களை மீறும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் தனியார் பேருந்துகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என அமைச்சர் பா. டெனீஸ்வரன் அக் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். (இ-9)

# கஞ்சாவுடன் சென்ற இளைஞன் கைது!

பருத்தித்துறை வல்லைச் சந்தி ஊடாக கஞ்சா கடத்திச் சென்ற 24 வயதுடைய இளைஞர் ஒருவர் காங்கேச துறை கடற்படையினரால் சுந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார். பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குகஞ்சா கடத்துவது தொடர்பாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 2 கிலோ 100 கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதிகளுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை காங்கேசன் துறைக்கு கடற்படையினர் கொண்டு சென்று இதுவரை விடுவிக்கவில்லை என வும் தெரிய வருகின்றது. இதில் வியாபாரி மூலையினைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார். (இ-5-60)

## ராசி பலன்

20.07.2015
(ஆடி 04, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 12.38 மணிவரை
பூரம் பின்னிரவு 12.06 மணிவரை
இராகுகாலம் 7.31-9.01 மணிவரை
சுபநேரம்-12.01-1.31 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | கிரக நிலை | | சூரி புதன் |
| | | | குரு சந், சுக் |
| | | சனி | ராகு |

**மீனம்:** நிர்வாகத்திறமை வெளிப்படும் நாள், நினைத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**கும்பம்:** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலை தூரத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**சிம்மம்:** குடும்பத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்:** செல்வநிலை உயர்வடையும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், போசன நன்மையுண்டு.

**கன்னி:** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப செலவுகள் கூடும், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலம் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.புற்றளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர் ஒருவருக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் மாணவிகளது நடன நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.





சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பேராசிரியர் முனைவர் பிரமிளா குருமூர்த்தியின் இசைக்கச்சேரி யாழ்.பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கலாநிதி ஸ்ரீ மரியசேவியர் அடிகளார் பேராசிரியர் முனைவர் பிரமிளாவிற்கு நினைவுக் கேடயத்தினை வழங்கி வைப்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற இசைக்கச்சேரியின் ஒரு பகுதியையும் இதன்போது அணிசேர் கலைஞர்களாக வயலின் க.குகபரன், மிருதங்கம் நா.மாதவன், கெஞ்சிரா நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோர் பங்குபற்றியதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.




மெண்டலின் சிவகுமாரின் லலிதஷேத்திரா வழங்கிய பிரணவம் தென்னிந்திய பிரபல வாத்தியக் கலைஞர் வழங்கிய சங்கமம் கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வமஹால் மண்டபத்தில் நடைபெற்றது.இதன் போது யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் வாழ்த்துரை வழங்குவதையும் நிகழ்வில் இடம்பெற்ற இசை நிகழ்வினையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



யாழ்.கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரியின் உயர்தர மாணவர்களது வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வானது அண்மையில் கல்லூரியின் மண்டபத்தில் அதிபர் ப.செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாடத்திற்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் ஐ.செல்வராஜா மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வின் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவர்களது ஒன்றுகூடல் நிகழ்வின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.



யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திற்கு புதிய கலைத்திட்டம் நடைமுறைப்படுத்துதல் செயற்பாட்டில் சர்வதேச விருது கிடைத்தமையை பாராட்டி பாடசாலை சமூகத்தால் வரவேற்பு உபசார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலை பழைய மாணவரும் லண்டன் பொறியியலாளருமான கெ.ஜெயவீர சிங்கம், அதிபர் மு.விக்னேஸ்வரனால் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Valampuri 001.pdf 1 7/19/2015 5:17:36 PM

# மகிந்தவின் குடியுரிமையை இரத்துச் செய்ய முடியும்!

## அநுரகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்த போது சுனாமி அனர்த்தம் காரணமாக வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு நிதியை வழங்கியதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை இரத்துச் செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

குருநாகலில் நேற்று நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வினவியதாகவும் ஜனாதிபதி ஆணைக்குழு நடத்தும் விசாரணைகளின் பின்னர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், குடியுரிமை இரத்தாகும் எனக் கூறியதாகவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில,

இரண்டு வருடங்கள் எஞ்சியிருக்கும் போது சோதிடர்களின் ஆலோசனைப்படி மகிந்த தேர்தலை நடத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக, பிரதியமைச்சராக, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக, ஜனாதிபதியாக பதவி வகித்து விட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரரக முயற்சித்து வருகிறார்.

ஜனாதிபதி பதவி இல்லாமல் போனதும் பிரதமர் பதவிக்கு வர முயற்சிக்கின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷ அணியினரிடம் இருந்து காப்பாற்ற வேண்டும். சிரமத்துடன் அதனை செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்து வருகிறார்.

மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க வேண்டுமாயின் வெற்றிலைக்கு எதிராக வாக்களியுங்கள் என அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 25 ஆயிரமாக அதிகரிக்கப்படுமாம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் கீழ் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 25 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பதாக கூறிய போதிலும் 7 ஆயிரம் ரூபாவே வழங்கப்பட்டுள்ளது எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 25 ஆயிரம் ரூபா அதிகரிக்க போவதாக தற்போது கூறியுள்ள போதிலும், அவர் ஜனாதிபதியாகவும் நிதியமைச்சராக கடந்த வருடம் இறுதியாக தாக்கல் செய்த வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்கவில்லை.

அத்துடன் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது எனவும் கூறியிருந்தார்.

10 வருடங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆட்சி செய்து விட்டு மக்களுக்கோ, அரச ஊழியர்களுக்கோ நிவாரணங்கள் எதனையும் வழங்காத மகிந்த ராஜபக்ஷ, அதிகாரமற்ற பிரதமர் பதவிக்கு வந்தால நிவாரணங்களை வழங்க போகிறார் என வும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவாகளை காப்பாற்றும் நோக்கில் மீண்டும் தேர் தலை எதிர்கொண்டுள்ள மகிந்தவை மக்கள் தமது வாக்குகளால் தோற்கடிப்பார்கள் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-7)

# பொதுத் தேர்தலுக்குப் பின் கூட்டணியை மாற்ற தற்போதே பேச்சுவார்த்தைகளில் சிறிய கட்சிகள்

பொதுத் தேர்தலின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசிய முன்னணியின் அணியொன்று தயாராகி வருவதாக தெரிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு உத்தியோக பூர்வமற்ற வகையில் நடந்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில சிறிய கட்சிகளின் தலைவர்கள் இந்த விடயம் தொடர்பில் முன்னின்று செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்து விட்டு தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தில் இணைய இவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

கொள்கை ரீதியான சில விடயங்களை அடிப்படையாக கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் முன்னோக்கி செல்ல முடியாது என்பது இவர்களது நிலைப்பாடாகும். அத்துடன் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெல்லும் எனவும் இவர்கள் எண்ணி வருவதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-7)


அளவெட்டி, மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது சங்க கிளைக்குழு தேர்தலுக்காக 30.06.2015 இல் மூடப்பட்ட அங்கத்தவர் பெயர் விபரமடங்கிய வாக்காளர் பட்டியல்கள் 20.07.2015 தொடக்கம் 05.08.2015 வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வரும் எமது விற்பனை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| கிளை இல | காட்சிப்படுத்தும் | | விற்பனை நிலையங்கள் |
|---|---|---|---|
| 01 | கிளை | 1 | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 02 | கிளை | 1 | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி |
| 03 | கிளை | 7 | அளவெட்டி தெற்கு, அளவெட்டி |
| 04 | கிளை | 4 | முதலியார் கோவிலடி, அளவெட்டி வடக்கு |
| 05 | கிளை | 5 | பொன்னிப்புலம், அளவெட்டி வடக்கு |
| 06 | கிளை | 6 | கணேஸ்வரம், அளவெட்டி கிழக்கு |
| 07 | கிளை | 7 | அளவெட்டி தெற்கு, அளவெட்டி |
| 08 | கிளை | 8 | கே.கே.எஸ். வீதி, மல்லாகம் |
| 09 | கிளை | 9 | கல்லாரை, மல்லாகம் |
| 10 | கிளை | 10 | குளமங்கால், மல்லாகம் |
| 11 | கிளை | 11 | கலைநகர், அளவெட்டி தெற்கு |
| 12 | கிளை | 12 | நீதிமன்ற வீதி, மல்லாகம் |
| 9A | கிளை | 9 | கல்லாரை, மல்லாகம் |

கிளி/அள.மல் அங்கத்தவர்கள்- கிளை 1 கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி

வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களில் திருத்தங்கள் இருப்பின் அவற்றையும், தங்கள் பெயர் இடம்பெறாதிருப்பின் அவை பற்றிய விபரங்களையும் 05.08.2015 இற்கு முன்னர் சங்க செயலாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் (சி-1621) செயலாளர்



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 56 சூரி, செவ் 6 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்: O/L/ லண்டன் PR<br>தொ.இ: B/4752 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 53 செவ் 12 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: B.Tech/ வங்கியாளர்<br>தொ.இ: G/4794 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 17<br>உயரம்: 176 செ.மீ<br>தகைமை/தொழில்: IT பட்டதாரி, தனியார் தொழில்<br>தொ.இ: B/4757 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 24 செவ் 7 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: MBA, CIMA தனியார் தொழில்<br>தொ.இ: G/4799 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில் MBBS வைத்தியர், விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4758 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 21.75 செவ். 4 இல்<br>உயரம்:160 செ.மீ<br>தகைமை/தொழில்: படவரைஞர், QS Following<br>தொ.இ: G/4800 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராட்டாதி<br>கி.பா: 26<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்: Bacheler in Cimputing/ லண்டன் PR<br>தொ.இ: B/4760 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13.75<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BSCIT/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1922 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்


பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail: kalyanamalai.jaffna@gmail.com

...து காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சரியான தீர்ப்பு!



நகரக் காவலரான சங்குப் பிள்ளை, ஒருநாள் மாலையில் ராஜ்யத்தின் தலைநகரை வலம் வந்து கொண்டிருக்கையில், கடைத் தெருவில் ஒரு இளைஞனை நான்கு நபர்கள் சூழ்ந்து கொண்டு அடிப்பதைப் பார்த்தார். உடனே அவர்களை அதட்டி, மிரட்டிய சங்குப் பிள்ளை, 'இவனை ஏன் அடிக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், 'இவன் பரமன் கடையிலிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடிக் கொண்டு சென்றான்' என்றனர்.

'அவன் திருடியதாகவே இருக்கட்டும்! ஆனால் அவனை தண்டிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை. அதனால் திருடனுடன் சேர்த்து உங்களையும் கைது செய்கிறேன்' என்று ஐவரையும் கைது செய்த சங்குப்பிள்ளை, அவர்களை மறுநாள் நீதிபதி முன்னிலையில் ஆஜர படுத்தினார். கடைக்காரரான பரமனும் வரவழைக்கப்பட்டார்.

முதலில் திருடிய இளைஞனிடம் நீதிபதி, 'உன் பெயர் என்ன?" என்று கேட்டதற்கு 'என் பெயர் வீரன்!" என்றான் அவன்! 'பரமன் கடையிலிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடியதாக உன்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அது உண்மையா?' என்று நீதிபதி கேட்டார். 'நீதிபதி அவர்களே! நான் செய்தது தவறா எனறு நீங்களே முடிவு செய்யுங்கள்!

பரமன் கடையில் ஒரு வாரம் கூலி வேலை செய்தால் ஒரு மூட்டை அரிசி தருவதாகக் கூறினார். அதற்கு ஒப்புக்கொண்ட நானும், ஒரு வாரம அவரிடம் வேலை செய்தேன். அதற்குப் பிறகு நான் கூலி கேட்டபோது, பரமன் அவர் வீட்டுக் கிணற்று சுவர்கள் இடிந்திருப்பதாகவும், அவற்றைப் புதிதாகக் கட்டவேண்டும் என்றும் கூறினார்.

முதலில் நான் ஒரு வாரமாகச் செய்த வேலைக்கு ஒரு மூட்டை அரிசி தர வேண்டுமென்றும், அதற்குப் பிறகு அடுத்த வேலை செய்வதாகவும் நான் சொன்னேன். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அதனால் எனக்குச் சேர வேண்டிய ஒரு மூட்டை அரிசியை நானே எடுத்துக் கொண்டேன். உடனே பரமன் 'திருடன்! திருடன்!' என்று கூச்சல்போட, இந்த நால்வரும் என்னைப் பிடித்து அடிக்க ஆரம்பித்தனர்' என்றான்.

வீரன் சொன்னதை கேட்ட நீதிபதி பரமனிடம், 'அவன் சொன்னது உண்மையா?' என்று கேட்டார்.

'அவன் என் கடையிலிருந்து அரிசி மூட்டையைத் திருடியது உண்மை! அதைத்தான் அவனே ஒப்புக்கொண்டு விட்டானே!' என்றான்.

'அதை விடு! நீ வாக்களித்தபடி அவனுக்கு ஒரு மூட்டை அரிசியை ஏன் கொடுக்க மறுத்தாய்?' என்று நீதிபதி வினவினார்.

'நான் கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. கிணற்று வேலை முடித்த பிறகு தருகிறேன் என்று தான் சொன்னேன்' என்றான் பரமன்.

'பரமா! நீ செய்தது தவறுதான்! அதனால் நீ அவனுக்கு கூடுதலாகப் பணம் தர வேண்டும்' என்றார் நீதிபதி.

பிறகு வீரனை நோக்கி, 'நீ பலவந்தமாக அரிசி மூட்டையை எடுத்தது தவறு! ஆகவே, பரமன் கொடுத்த கிணற்று வேலையை முடித்த பிறகு ஒரு மூட்டை அரிசியையும், பரமனிடமிருந்து கூடுதல் பணமாகப் பத்து பொற்காசுகளும் பெற்றுக் கொள்!' என்றார் நீதிபதி.

பிறகு, வீரனைப் பிடித்து அடித்த நால்வரையும் நோக்கி, 'பரமன் திருடன், திருடன் என்று கூவியவுடன், நீங்கள் ஓடிப்போய் வீரனைப் பிடித்தது தவறில்லை.

ஆனால் அவன் உண்மையாகத் திருடனா என்பது தெரியாமல் அவனை நீங்கள் எப்படி அடிக்கலாம்?

சட்டத்தை நீங்களே கையில் எடுத்துக் கொண்டதற்காக, உங்களுக்கு ஒரு வாரம் சிறைத் தண்டனை அளிக்கிறேன்!' என்றார்.

நீதிமன்றத்தில் கூடியிருந்தவர்கள் தீர்ப்பைக் கேட்டு கைதட்டி ஆரவாரம் செய்தனர்.




- ➢1618 - புளூட்டோ பூமிக்கு மிக அண்மைக்கு வந்தது. இதன் அடுத்த நிகழ்வு 1866 இல் நிகழ்ந்தது. மீண்டும் இது 2113 இல் நிகழும்.
- ➢1871 - பிரித்தானியக் கொலம்பியா கனடாவுடன் இணைந்தது.
- ➢1917 - முதலாம் உலகப் போர்: யூகொஸ்லாவிய இராச்சியம் உருவாக்கப்பட்டது.
- ➢1924 - அமெரிக்க உதவி தூதுவர் 'ரொபேர்ட் இம்ரி' சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து ஈரானின் தெஹ்ரான் நகரில் இராணுவச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- ➢1935 - இந்தியாவில் லாகூரில் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் பலர் கொல்லப்பட்டனர்.
- ➢1940 - டென்மார்க் பன்னாட்டு அமைப்பிலிருந்து விலகியது.
- ➢1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய இராணுவத் தளபதி ஒருவனால் ஹிட்லர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியிலிருந்து அவர் தப்பித்தார்.
- ➢1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாம் தீவை அடைந்தன.
- ➢1949 - 19-மாத அரபு - இஸ்ரேல் போரின் பின்னர் இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டனர்.
- ➢1951 - ஜோர்தானின் மன்னர் முதலாம் அப்துல்லா ஜெருசலேமில் வெள்ளிக்கிழமைத் தொழுகையின் போது சுட்டுக் கொல்லப்பட்டார்.
- ➢1953 - யூனிசெப் அமைப்பை நிரந்தரமாக்கும் முடிபு ஐ.நாவில் எட்டப்பட்டது.
- ➢1954 - வியட்நாமை இரண்டாகாப் பிரிக்கும் உடன்பாடு ஜெனீவாவில் எட்டப்பட்டது.
- ➢1960 -இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவானார். இவரே நாடொன்றின் தலைவராகத் தெரிவான முதற் பெண் ஆவார்.
- ➢1962 - கொலம்பியாவில் நிலநடுக்கத்தில் 40 பேர் கொல்லப்பட்டனர்.
- ➢1969 - அப்பல்லோ 11 சந்திரனில் இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்றோங், எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்தனர்.
- ➢1976 - வைக்கிங் 1 சந்திரனில் இறங்கியது.
- ➢1979 - இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.
- ➢1980 - இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் நகரை ஐ.நா உறுப்பு நாடுகள் அங்கீகரிக்க முடியாதவாறு ஐ.நா பாதுகாப்பு அவை 14-0 என்ற வாக்குகளால் தடையுத்தரவைப் பிறப்பித்தது.
- ➢1989 - பர்மாவின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகீ இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

**பிறப்புகள்**

- ➢கி.மு 356 - மகா அலெக்சாந்தர், கிரேக்க மன்னன் (இ. கி.மு 323)
- ➢1822 - கிரிகோர் ஜோஹன் மெண்டல், ஆஸ்திரிய மரபியல் அறிவியலாளர் (இ. 1884)
- ➢1919 - சேர் எட்மண்ட் ஹில்லறி, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் மனிதர், நியூசிலாந்தின் மலையேறி
- ➢1923 - மு. சிவசிதம்பரம், ஈழத் தமிழ் அரசியல்வாதி (இ. 2002)
- ➢1929 - ராஜேந்திர குமார், இந்திய நடிகர் (இ. 1999)
- ➢1975 - ரே ஏலன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- ➢1937 - மார்க்கோனி, வானொலியைக் கண்டுபிடித்தவர் (பி. 1874
- ➢1973 - புரூஸ் லீ, தற்காப்புக்கலை வல்லுநர், ஹாலிவுட் நடிகர் (பி. 1940)

**சிறப்பு நாள்**

- ➢அனைத்துலக சதுரங்க நாள்

## அனைத்துலக சதுரங்க நாள்



அனைத்துலக சதுரங்க நாள் (International chess day) பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பின் (FIDE) வழிகாட்டலின் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 20 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

1924 ஆம் ஆண்டு ஜூலை 20 இல் உலகச் சதுரங்கக் கூட்டமைப்பு பாரிஸ் நகரில் நிறுவப்பட்டது. ஜூலை 20 ஆம் திகதியை அனைத்துலக சதுரங்க நாளாக 1966 ஆம் ஆண்டில் இக்கூட்டமைப்பு அறிவித்தது.

பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு என்பது உலக நாடுகளின் சதுரங்க அமைப்புகளை ஒன்றிணைக்கும் ஒரு உலக நிறுவனமாகும். இது பொதுவாக (பிரெஞ்சு மொழியில்) FIDE (ஃபீடே) என அழைக்கப்படுகிறது. FIDE பிரான்சின் பாரிஸ் நகரில் ஜூலை 20, 1924 இல் அமைக்கப்பட்டது. இதன் குறிக்கோள் Gens una sumus, இதன் பொருள் "நாம் அனைவரும் ஒரே மக்கள்" என்பதாகும். தற்போது இந்நிறுவனத்தில் 150 இற்கும் மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலகில் பல விளையாட்டுகள் காணப்பட்ட போதிலும்கூட, உள்ளக் விளையாட்டான சதுரங்கம் முக்கியத்துவமான விளையாட்டுக்களில் ஒன்றாக புராதன காலங்கள் தொட்டு இன்றுவரை மதிக்கப்படுகின்றது.

புராதன காலங்களில் அரசர்களின் விளையாட்டு என வர்ணிக்கப்பட்ட சதுரங்கம் (Chess), இருவர் விளையாடும் ஒரு பலகை விளையாட்டாகும். ஒரு பக்கத்துக்கு 16 காய்கள் வீதம், 32 காய்கள் இவ் விளையாட்டில் பயன்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக இரண்டு நிறங்களில் காய்கள் அமைந்திருப்பது வழக்கம். விளையாடும் பலகை, 8 நிரைகளிலும், 8 நிரல்களிலும் (8X8) அமைந்த கட்டங்களைக் கொண்ட சதுர வடிவமானது. பொதுவாக சதுரங்கள் கறுப்பு வெள்ளை நிறங்களில் மாறி மாறி அமைந்திருக்கும்.

**மூளைக்கு வேலைத்தரும் விளையாட்டு**

சதுரங்கம் அதிஸ்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளையாட்டு அல்ல. மூளைக்கு வேலைத்தரும் ஒரு விளையாட்டாகக் கருதப்படுகின்றது. மதியூகமும், தந்திரமும் இவ் விளையாட்டுக்கு முக்கியமானதாகும். அதேநேரம், இது ஒரு விளையாட்டாக மட்டுமன்றி, கலையாகவும் அறிவியலாகவும் கூட வர்ணிக்கப்படுவதுண்டு. சதுரங்கம் பொழுதுபோக்காகவும், போட்டியாகவும், விளையாட்டு அமைப்புகளின் சுற்றுப்போட்டிகளாகவும் நடத்தப்படுகின்றன. இத்தகைய போட்டிகள் பிரதேச மட்டம், தேசிய மட்டம், சர்வதேச மட்டம் என வியாபித்து நடத்தப்படுவதுமுண்டு. நவீன காலத்தில் இணையத்தளங்களிலும் சதுரங்கம் ஆடப்படுவதுண்டு. இதற்கான பல நூற்றுக்கணக்கான தனி இணையத்தளங்கள் இன்று இணையப் பின்னலில் காணப்படுகின்றன.

**ஆட்டத்தின் எதிர்பார்ப்பு**

இருவரால் விளையாடப்படும் இந்த விளையாட்டில் தனது அரசனை பாதுகாத்துக்கொண்டு, எதிரியின் அரசனை வீழ்த்துவதே ஆட்டத்தின் எதிர்பார்ப்பாகும். தனது அரசனை காப்பாற்றிக் கொண்டு எதிர்த் தரப்பு அரசனை வீழ்த்தியதும் இவ்வாட்டம் நிறைவுபெறும். அரசனைக் காப்பாற்றியவர் வெற்றி பெற்றவராகவும், அரசனை இழந்தவர் தோல்வியடைந்தவராகவும் தீர்மானிக்கப்படுவார்.

**சதுரங்கக் காய்கள்**

சதுரங்க ஆட்டத்தில் சதுரங்கக் காய்கள் அரசன், அரசி, கோட்டை, மந்திரி, குதிரை, படைவீரன் போன்ற பெயர்களால் அழைக்கப்படும்.


புகழ் பெற்ற சில வீரர்கள்

உலக சதுரங்க ஆட்டத்தில் புகழ் பெற்ற சில வீரர்கள்:- ஸ்டைநிட்ஸ், லாஸ்கர், காப்பிளான்கா, அலேஹின், இயூவ், பொட்வின்னிக், சிமிஸ்லொவ், டால், பெட்ரொசியான், ஸ்பாஸ்கி, ஃபிஷர், கார்ப்பொவ், காஸ்பரொவ், கிராம்னிக், ஆனந்த்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடைய செல்பேசி ஒட்டுக்கேட்கப்படுகிறது!

## ஆலன் ரஸ்பிரிட்ஜர் சிறப்புப் பேட்டி



2013 ஜூனில் இணைய உலகில் நடந்த, மிகப் பெரிய அரசு இயந்திர ஒட்டுக் கேட்பு விவகாரத்தை எட்வர்ட் ஸ்னோவ்டன், கிளென் கிரீன்வால்ட், லாரா பொயிதராஸ் மூவரும் வெளிக்கொணர்ந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

அமெரிக்க அரசுக்காக அதன் 'தேசிய பாதுகாப்பு முகமை' (என்.எஸ்.ஏ.) ஒட்டுக் கேட்ட நாடா பதிவுகள் அம்பலப்படுத்தப்பட்டதில், 'தி கார்டியன்' நாளிதழுக்கு முக்கியப் பங்கு உண்டு.

உலகெங்கும் அப்போது இரு பெரும் விவாதங்களுக்கு 'தி கார்டியன்' அப்போது வழிவகுத்தது.

'மக்களை இப்படி அரசு வேவு பார்க்கலாமா?' என்றும் 'அரசு வேவு பார்ப்பதைப் பத்திரிகை வெளியிடலாமா?' என்பது அந்த விவாதங்கள். இன்றும் அந்த விவாதங்கள் தொடர் கின்றன.

ஆலன் ரஸ்பி ரிட்ஜர் 'தி இந்து' வுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் இது உட்பட் பல விடயங்களையும் பற்றி விரிவாகப் பேசினார்.

**எட்வர்ட் ஸ்னோவ்டனை மன்னித்து விடும் படி கடந்த ஜூனில் 'தி கார்டியன்' தலையங்கம் எழுதியது. ஸ்னோடனைச் சமீபத்தில் சந்தித்தீர்கள்.**

**அமெரிக்காவுக்குத் திரும்பினால் அவருக்கு என்ன நடக்கும்?**

அவரை மன்னித்துவிடும்படி நாங்கள் வாதாடவில்லை. பொதுநலன் கருதித்தான் இவற்றை வெளியிட்டேன் என்று அமெரிக்கா திரும்பிச் சொல்வதற்கு அவருக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும் என்றுதான் கூறினோம்.

உளவுச் சட்டப்படி அவர்மீது வழக்கு தொடரப்படக் கூடாது. அதுதான் அவருடைய நிலைப்பாடும்கூட என்று நினைக்கிறேன்.

அவர் இப்போது எங்கே இருக்கிறாரோ அங்கேயே இருப்பதுதான் அமெரிக்கர்களுக்கு ஏற்றதாக இருக்கிறது. அவரால் இப்போது எதையும் அம்பலப்படு த்த முடியவில்லை.

ரஷ்யாவில் இருப்பது மிகவும் கடினமாக இருக்கிறது ஸ்னோவ்டனுக்கு.

அதேசமயம் அவரை விரும்பாதவர்கள் கூறக்கூடும், "பாருங்கள் ஸ்னோடன் எங்கே இருக்கிறார்? ரஷ்யாவில் (புகலிடம்) இருக்கிறார். மனித உரிமைகள் குறித்து அவருக்குக் கவலை இல்லை, இருக்கிறதா என்ன?" என்று அவர்கள் கேட்கக்கூடும்.

**அமெரிக்காவில் இருக்க முடியவில்லையே என்று ஸ்னோடன் வருந்துகிறாரா?**

அவர் அமெரிக்காவை நேசிக்கிறார், அங்கே வசிக்க விரும்புகிறார். பெரும்பாலும் இணையதளம் மூலமே வாழ்ந்திருக்கிறார்.

எனவே இப்போதும் எதையும் இழந்துவிடவில்லை, தொடர்ந்து நண்பர்களுடன் தொடர்புகொள்கிறார்.

**லத்தீன் அமெரிக்க நாடுகளில் அடுத்து அவர் புகலிடம் தேடுவது சரியாக இருக்குமா? அரசியல் புகலிடம் கோரி அவர் அளித்த விண்ணப்பங்களை அந்த நாடுகள் நிராகரிக்கவில்லையே?**

லத்தீன் அமெரிக்க நாடுகள் அவருடைய முதல் தேர்வாக இருந்திருக்கலாம்.

சுமார் 20 நாடுகள் அவருடைய அரசியல் புகலிடக் கோரிக்கையை நிராகரித்தன. எனவே அவருக்கு மாற்று வழிகளே இல்லை.

ரஷ்யாவுக்கு அவர் நன்றிக்கடன்பட்டிருந்தாலும் அவருடைய முதல் தேர்வு ரஷ்யாவாக இருந்திருக்காது.

ரஷ்யர்களுக்குப் பொறுமை போய்விட்டால் அவர் எப்படி தென் அமெரிக்க நாடுகளிடம் அடைக்கலம் கோருவார் என்று தெரியவில்லை. அவர் தொடர்ந்து ரஷ்யாவிலேயே தங்கியிருப்பதற்கும் ஏதோ பேரம்தான் காரணம் என்கிறார்கள்.

**ஸ்னோவ்டன் பதிவுகள் வெளியாகி 2 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது. அதைப் பற்றி போதிய அளவுக்கு விவாதங்கள் நடந்தனவா?**

**நாட்டுப்பற்றுச் சட்டத்தின் சில பிரிவுகளை அமெரிக்காவின் சுதந்திரச் சட்டம் நீக்கிவிட்டது.**

**இந்தச் சட்ட மாறுதல்கள் போதுமானவையா?**

இது மிகவும் சிக்கலான விவகாரம்.

மற்றவர்கள் சொல்வதற்கு வாய்ப்பு தராமல், நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் மட்டும் முடிவு செய்கிற விடயமல்ல இது. இதுகுறித்து ஏதோ ஓரளவுக்குத்தான் விவாதம் நடந்ததே தவிர போதுமான அளவுக்கு நடந்துவிடவில்லை.

'இந்த விவகாரங்கள் குறித்துப் பேச விரும்பவில்லை' என்ற நிலையிலிருந்த பாதுகாப்பு முகமைகள், 'பேசலாம் என்றே கருதுகிறோம்' என்று சொல்லும் அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சுதந்திரச் சட்டத்தால் விளைந்த மாறுதல்கள் போதுமானவையா என்று கேட்கிறீர்கள்.

தனக்கான விதிகள் என்ன என்பதை அந்தந்த நாடுதான் தீர்மானிக்க வேண்டும்.

'எல்லாத் தகவல்களையும் அரசு சேகரிக்கும்' என்ற நிலையிலிருந்து, 'எல்லாத் தகவல்களையும் அரசு வைத்திருக்க வேணடியதில்லை. தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அவற்றை வைத்துக்கொள்ளலாம். தேவைப்படும் தகவல்களைக் கோரிப் பெற நாம் விதிமுறையை வகுத்துக்கொள்ளலாம்' என்று அரசு சொல்லும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது.

என்னைப் பொருத்தவரை இந்த நிலை மாற்றமே முன்னேற்றம்தான். (தொடரும்)

-தி இந்து-



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-192

...இதுக்கான பதில் சிக்குமா... இல்ல கடவுள் மாதிரியே கடைசி வரைக்கும் காணக் கெடைக்காமலே போயிருமான்னு அனாதியா அலையிறாரு சாமியாரு.

தேசாந்தரம் போயித் தெக்க திரும்பிவரவும் காத்து வாக்குல சொன்னாக கருவாச்சி கதைய.

வாழ்வே தவமாய் வலிகளே வரமாய் இப்படியும் ஒரு பெண்மகளா? அவள நெனைக்க நெனைக்க சாமியாருக்கு நெத்தியில வெளக்கு எரியுது..

படிக்காத பாமரச்சி பொழச்சபொழப்புல இவர் கேள்விக்குண்டான பதில் இருக்கிறதா அவர் புத்திக்குள்ள கௌலி கத்துச்சு போலருக்கு. பொடிநடையாப் புறப்பட்டு வந்துட்டாரு சொக்கத்தேவன் பட்டிக்கு.

எனக்கும் ஒரு கவளம் தருவாயா தாயே?

மொடாவுல அகப்பைய விட்டு மோந்து மோந்து போட்டுக்கிட்டிருந்த கருவாச்சி கேக்காத ஒரு குரலும் கேக்காத ஒரு மொழியும் கேட்டதும் தன்ன மறந்து அண்ணாந்து பாத்தா.

சும்மா ஊறப்போட்ட தேங்காநாரு மாதிரி சடையோட, நெஞ்சுல எறங்கிச் சம்மணங்கால் போட்டு உக்காந்திருக்கிற எலவம் பஞ்சுத் தாடியோட ஒரு சாமியார் கையேந்தி நிக்கக் கண்டதும் அகப்பைய மொடாவுல விட்டுட்டு அவரையே பாக்குறா கருவாச்சி.

கெடையில கெடந்த செம்பிலிமாடு மாதிரி புழுதியடிச்சுக் கெடக்குற திரேகத்துல கண்ணுக ரெண்டு மட்டும் பளிங்காங் குண்டுமாதிரி பளிச் பளிச்சுன்னு மின்னுதுக. இருதயத்த அராவி உசுர்க்கூட்ட அறுக்குது அந்தக் கெட்டியான பார்வ.

கையேந்தி நிக்கிற சாமியாரக் கையெடுத்துக் கும்புடுறா கருவாச்சி.

காத்தில்லாத எடத்துல நின்டு எரியிற தீபம் மாதிரி சிமிட்டாமக் கருவாச்சியப் பாத்து நிக்கிது சாமியார் கண்ணு.

கெடச்சுப் போச்சு கேள்விக்கு பதில்ன்னு நிம்மதியில நெறஞ்சு நிக்குது அவர் மனசு.

இத்துப்போன நெஞ்சுக் கூட்ல ஏகப்பட்ட நெனப்பு ஓடுது சாமியாருக்கு;

நீதான் கருவாச்சி என்னும் பெரிய ஞானமணித் திருவிளக்கோ?



என் தத்துவத் தேடல்களின் பூரண மையம் நீயோ? எம் பெருமான் வள்ளுவரும் திருமூலரும் ஞானமுனிகளும் வேதரிஷிகளும் அந்தரத்தில் தேடியலைந்த அறப்பொருள் நீதானோ? உன்னைக் கண்டதும் நாபிக்கிழங்கிலிருந்து புறப்படும் ஞானவாசனையால் என் இருதயம் கமழ்ந்து வழிகிறது பெண்ணே!

புதிர்கொண்ட வாழ்வை எப்படி நீ எதிர்கொண்டாய் என் காற்றின் நாவுகள் என் காதில் கிசுகிசுத்தன தாயே!

நீயே கர்மயோகி! நீயே தவம்! நீயே ஞானம். சரீரம்- மனம்- ஆத்மம்- பிரும்மம் என்ற நான்கையும் நான்காகக் கருதி வாழும் நாங்கள் ஆஷாடபூதிகள். எந்தக் கல்வியறிவுமில்லாமல் இந்த நான்கும் ஒன்றென்று கருதி வாழும் நீயல்லோ ஞான குலமாதரசி!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியிருப்பு வீதியை அகலப்படுத்தி மின்சாரத்தை வழங்கி உதவுங்கள்





## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் சிவன் கோவில் வீதியை அண்மித்த குடியிருப்புக்களில் தற்போது திருமணம் செய்தவர்களுக்கும் வேறு இடங்களில் இருந்து வருகை தந்தவர்களுக்கும் இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அப்பகுதியிலுள்ள ஒரு குடும்பத்திற்கு மட்டும் இவ்வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட குடும்பம் ஆதங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடலுணவு வியாபாரத்தில் ஈடுபடுகின்றவரின் குடும்பத்திற்கே இந்த வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறவில்லை.

வன்னி யுத்தத்தின்போது தனது மனைவியையும் மகனையும் இழந்த நிலையில் வாழ்ந்துவரும் இக்குடும்பத்தில் தகப்பன் உட்பட ஐவர் குடும்ப அங்கத்தவர்களாக உள்ளனர்.

இதற்கமைய இரு பெண் பிள்ளைகளும் இரு ஆண்பிள்ளைகளும் இக்குடும்பத்தின் அங்கத்தவர்களாவர். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்ற காரணத்தினால் வீட்டுத் தோட்டத்திற்கான புள்ளிகள் போதாமையே காரணம் எனக் கூறப்படுகின்றது.

நிரந்தரமாகவே இங்கு வசித்து அனைத்து சொத்துக்களையும் இழந்து கஷ்டமான நிலையில் வாழும் இக்குடும்பத்திற்கு புள்ளிகள் என்ற காரணத்தை சுட்டிக்காட்டி வீட்டுத் திட்டம் வழங்கப்படாமையால் உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் தொடர்பு கொண்டு கடிதங்கள் வழங்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் இக்குடியிருப்பிற்கு முன்பாக உள்ள வீதி, பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றது.

அத்துடன் இக்குடியிருப்பில் வசிக்கின்ற 12 குடும்பங்களுக்கும் மின்சார வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குறித்த வீதியை அகலப்படுத்திதமக்கான மின்சாரத்தையும் வழங்கியுதவுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

## காடுகளைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு

(கிளிநொச்சி)

காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மரங்களை நாட்டுதல், காடுகளை வளர்ப்பதனூடாக இயற்கை சமநிலையினைப் பேணுதல் உட்பட விடயங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு கருத்தரங்கு. கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் பாடசாலை ஆசிரியர் எஸ்.கதிர்மகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட வனவள அதிகாரி நடராசா செல்வநாயகம், மாணவர்கள் மத்தியில் காடுகளைப் பாதுகாத்தல் தொடர்பாக விழிப்புணர்வு உரையினை ஆற்றினார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச வனவள அதிகாரி ஏ.ஏ.ரி.எம்.அமரசிங்கா மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுவரும் நிலையில் கிளிநொச்சி மாவட்ட வனவளத் திணைக்களம், காடுகளைப் பாதுகாப்பது தொடர்பாக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# பழைய முறிகண்டி ஆற்றின் காடுகள் அழிக்கப்பட்டு மணல் அகழப்படுகின்றது

## கிராம மக்கள் விசனம்

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு துணுக்காய் பழைய முறிகண்டிக் கிராமத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வினால் கிராமத்திற்கு பெரும் சூழலியல் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

48 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் மீள்குடியேற்றம் தொடங்குவதற்கு முன்னரே பெருமளவு மணல் அகழ்வு இடம்பெற்று வந்தது.

கிராமத்தில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு தொடர்பாக வடமாகாண முதலமைச்சர், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோருக்கு கிராம மக்களினால் மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக டிப்பர் வாகனங்களில் மணல் கொண்டு செல்லப்படுவதனால் கிராமத்தினுடைய ஒரேயொரு போக்குவரத்து வீதி குன்றும் குழியுமாக மாறியுள்ளது. பழையமுறிகண்டி ஆற்றின் காடுகள் பெருமளவு அழிக்கப்பட்டு மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளதாக கிராம மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (2)

# கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கான நிரந்தரசேவை அதிகாரியை நியமிக்குக

(பனிக்கன்குளம்)

கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கான நிரந்தர இளைஞர்சேவை அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி யிடம் இளைஞர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்றையதினம் மாலை முள்ளிய வளையில் இளைஞர் கழகத்தினருக்கும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்விலேயே இளைஞர்களால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிக பிரதேசத்தை கொண்ட அதிக இளைஞர்களை கொண்ட எமது பகுதியின் இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை எமக்கு பெற்றுத் தருகின்ற இளைஞர் சேவை அதிகாரியின் சேவை எமக்கு பல மாதங்களாக கிடைக் கப்பெறவில்லை.எமது பிரதேச இளைஞர்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு எமக்கு ஒரு நிரந்தர இளைஞர் சேவை அதிகாரியை நியமிக்குமாறு இளைஞர்கள் மேலும் தெரிவித்தனர். (2-281)

## கழிவு அகற்றும் வாகனம் விபத்து இருவர் காயம்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலைக்குச் சொந்தமான கழிவு அகற்றும் பௌசர் வாகனம் விபத்திற்குள்ளாகியதையடுத்து அதில் பயணித்த இருவர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவம் தள்ளாடி - திருக்கேதீஸ்வரம் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னார் பொது வைத்தியசாலையில் இருந்துகழிவுகளை, தள்ளாடிவீதியூடாககொண்டு சென்று கொண்டிருந்த போது தள்ளாடி-திருக்கேதீஸ்வரம் பிரதான வீதியில் குறித்த பௌசர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியோரமாக குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது குறித்த வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மன்னார் வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)

# கிணற்று நீரின் கலங்கல் தன்மை நீக்கப்பட்டதும் குடிநீர் வழங்கப்படும்

## கிளி.நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தகவல்

கிளிநொச்சி அக்கராயனில் 6 மாதங்களில் குடிநீர் வழங்குவதற்காக தொடங்கப்பட்ட குடிநீர்த்திட்டமொன்று இரு ஆண்டுகள் கடந்த நிலையிலும் திட்டம் செயற்படுத்தப்படாமல் முடங்கியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இருஆண்டுகளுக்கு முன்னர் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் 16 மில்லியன் ரூபாய் செலவில் அக்கராயன் மத்தியபகுதி, கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மேற்குப் பகுதிகளுக்கான குடிநீர்த்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்டு வேலைகள் நிறைவடைந்த நிலையிலும் இதுவரை குடிநீர் வழங்கல் ஆரம்பிக்கப்படவில்லை.

அக்கராயனில் ஜூன், ஜூலை மாதங்களில் கடுமையான குடிநீர் நெருக்கடி ஏற்படுவது வழமையாகும். அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலம் ஆகிய இருபாடசாலைகளின் மாணவர்களும் பிரதேச மக்களும் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள நிலையில் குடிநீர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமலிருப்பது பெரும் சிரமங்களை உருவாக்கியுள்ளது.



இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளரான தி.பாரதிதாசன் கருத்துத் தெரிவிக்கையில்,

நீர் வழங்குகின்ற கிணற்றல் கலங்கல் தன்மை காணப்படுகின்றது. அக்கலங்கள் தன்மையினை நீக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். குறைந்தது மூன்று வாரங்களில் குடிநீர் வழங்க முடியுமென நம்புகின்றேன்.

குடிநீர் வழங்கல் என்பது உடனடியாக மேற்கொள்ளமுடியாது. ஏனெனில் மக்களுக்கு தூய்மையான குடிநீரையே வழங்க வேண்டும். அதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றதெனவும் அவர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச உதவி முகாமையாளர் சேவைக்கு 4ஆயிரம் பேரை இணைக்கத்தீர்மானம்

அரச உதவி முகாமையாளர் சேவைக்கு 4000 பேரை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல கட்டங்களின் கீழ் புதிய சேவையாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாக அரச நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார்.

அரச உதவி முகாமையாளர் சேவையாளருக்கான தேர்வு பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடத்தவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் முதல்வாரத்தில் இடம்பெறும் எனவும் அரச நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## தபால் மூலம் வாக்களிக்க அனுமதி கோரும் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்முறை பொது தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு பதிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தேர்தல் ஆணையாளரிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு அவர் அனுமதி வழங்கியுள்ளதாக தேரதல் செயலக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதற்கமைய இம் முறை தேர்தலுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தபால் மூலம் வாக்களிக்க வுள்ளார்.

குருநாகல் மாவட்ட த்தை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில போட்டியிடும் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அம்பாந்தோ ட்டை மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு பதிவு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)


## தேர்தல் வெற்றியின் பின்னர்

# சுயாட்சி முறைமை ஏற்படுத்தப்படும்!

### தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கை

(கொழும்பு) —

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் சுயாட்சி முறைமை ஏற்படுத்தப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் பாரிய வெற்றியை பதிவு செய்து, அந்தப் பகுதிகளில் சுயாட்சி முறைமை உருவாக்கப்படும் எனவும் தெரிவித்தார். சுயாட்சியை ஏற்படுத்த வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேணடும்.

இந்த இலக்கை அடையும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே வடக்கு, கிழக்கிற்கு வெளியே பெருமளவு தமிழ் மக்கள் வாழ்ந்த போதிலும் அந்தப் பகுதிகளில் போட்டியிடவில்லை.

கொழும்பு மாவட்டத்தில் பெருமளவு வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் வாழ்ந்து வந்த போதிலும் வடக்கு, கிழக்கில் சுயாட்சி அதிகார முறைமை உருவாக்கும் நோக்கில் இவ்வாறு போட்டியிடவில்லை என சம்பந்தன் கூறியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 370 | 350 | 400 |
| தக்காளி | 160 | 150 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 90 |
| கரட் | 140 | 250 | 240 | 140 |
| பூசணி | 30 | 50 | 40 | 30 |
| புடோல் | 30 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 110 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 150 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 50 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 140 | 100 |
| பயற்றங்காய் | 80 | 90 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 170 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 180 | 70 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 200 | 220-310 | 160 | 200 |
| போஞ்சி | 180 | 170 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 70 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 100 | — | — | 120 |
| வெங்காயப்பூ | 160 | — | 250 | 200 |
| முள்ளங்கி | 40 | 80 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 437

Search for people, places and things Nagendram Home

சாந்தி வரதன்

மூடிய கண்களுக்குள்
எத்தனை இனிய
கனவுகள்
விழித்துப் பார்க்கையில்
வாழ்க்கை
முழுவதுமே வலிகள்

இனிகா ராகுலன்





தனுசிகா தவராசா

ஏன் உங்க நாய்க்கு மூக்கு கண்ணாடி போட்டு இருக்கிறீங்க?




பார்வை
மங்கிட்டதால
ஒருவாட்டி
என்னையே
கடிச்சிருச்சு

ராஜ் நட்ராஜ்





சர்மி சர்மிளா




நந்தா மாசிலாமணி

Love ல ஜெயிக்கிறவன் Life ல தோற்று போகிறான்...



Love ல தோற்று போறவன் Lifeல ஜெயிச்சுடுறான்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழரின் தீர்வு!

## லண்டனில் வடக்கு முதல்வர் ஆற்றிய உரை

அரசியல் தீர்வுத் திட்டங்களைத் தயாரிப்போர் திம்புக் கோட்பாட்டினை மனதிற் கொண்டு செயலாற்ற வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் லண்டனில் நடத்திய சிறப்புரையும் கலாச்சார மாலையும் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போது முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் முழுவடிவம்:**

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பயணத்தின் பின்னர் என் தங்கையார் குடும்பத்துடன் அமைதியாக பொறுப்புகளில் இருந்து சற்று விடுபட்டவாறு ஓரிரு நாட்களைக் கழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் இந்நாட்டுக்கு வந்தேன்.

ஆனால் என் நண்பர்கள், மாணவர்கள, தமிழன்பர்கள், அபிமானிகள் போன்றோரின் அன்பு மனங்கள் என்னை விடுவதாக இல்லை. அதைவிட அரசியல்ரீதியாக நான் சில நடவடிக்கைகளை எடுக்கக் கடமைப் பட்டவன் என்ற கருத்தை எனது அலுவலர்கள் எனக்கு நினைவுறுத்தவும் பின்னிற்கவில்லை.

ஆக மொத்தம் முன்னர் போலவே நாளாந்தம் என் வேலைப்பளு தொடர்ந்து என்னை வாட்டி வருகின்றது. நான் என் நண்பர்களுக்கு அடிக்கடி சொல்லும் வாசகந்தான் வண் ஸ்ரீ காரை வைத்து நவீன வாகனங்களின் ஓட்டத்தை எதிர்பார்க்கின்றீர்கள் என்பது.

அமெரிக்க நாட்டில் இருந்தபோது எனது உடல் நிலைபற்றி மக்கள் எடுத்துக்கொண்ட கரிசனை என்னை பிரமிக்க வைத்தது. நீங்கள் எங்களுக்கு வேண்டும் என்றார்கள். என் உடல் நிலை நலமாக இருக்கப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டார்கள்.

எனவே பலவிதமான சுமைகளின் மத்தியில்தான் உங்கள் யாவரையும் சந்திக்கின்றேன். ஆனால் உங்கள் அன்புள்ளங்களின் உணர்வலைகள் என்னை அச்சுமைகளைச சுமக்குமளவிற்கு சுகமளித்து வருகின்றன. இங்கும் உங்கள் அன்பின் வெளிப்பாடு மனதை நெகிழ வைக்கின்றது.

போற்றுவார் போற்றுவதும் தூற்றுவார் தூற்றுவதுந் தொடர்ந்திருந்து வந்தாலும் எமது தமிழுள்ளங்கள் என்றும் போல் தம்மிடையே தர்க்கத்தையும் தனித்துவத்தையும் வெளிக்காட்டி விமர்சனங்களை வெளிக்கொண்டு வந்திருந்தாலும்,

எனது மிகுதி சொற்ப கால வாழ்க்கையின் போது என்னால் இயலுமானதை எமது மக்களுக்கு வழங்க நான் கடமைப்பட்டவன் என்ற எண்ணம் என்னை முன்னோக்கி நடத்திக் கொண்டிருக்கின்றது. 133 ஆயிரம் மக்கள் தமக்கு சேவை செய்வதற்காக என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

அவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு சேவையாற்ற நான் கடமைப்பட்டுள்ளேன். அக்கடமை வழியில் கரிசனையுடன் கலந்து செல்ல அந்தக் கடவுளானவன் எனக்குப் போதிய வலுவையும், திண்மையையுஞ் சக்தியையும் வழங்குவானாக!

இன்று சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் அனுசரணையின் கீழ் நான் இந்தக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்குக் காரணம் ஒன்றுண்டு. பலரும் என்னைப் பேசவேண்டும் என்று அழைத்திருந்தார்கள். எவர் மனதையும் புண்படுத்த நான் விரும்பவில்லை.

எல்லோர் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவும் என்னால் முடியவில்லை. நான் அரசியலுக்குப் புதியவன். பல கட்சிகள் சேர்ந்து என்னை வடக்கு மாகாண முதல்வராக வர முன்னின்றன. பல தடவைகளில் சில கட்சிகள் நான் எந்த ஒரு கட்சிக்கும் பக்கச் சார்பு காட்டக்கூடாது என்று என்னைப் பலவந்தப்படுத்தியதும் உண்டு.

எனவே தனித்துவமாக நிற்பதே உசிதம் என்று எனக்குப்பட்டது. அத்துடன் மக்களுக்கு நன்மை பெற்றுக் கொடுக்கவே கட்சிகளை உருவாக்கினோம். இப்போது கட்சிகள் மக்களிலும் பார்க்க முக்கியத்துவம் அடைந்து வருவதைக் காண்கின்றோம். என்னைப் பொறுத்தவரையில் மக்களின் நலனே எமக்கு முக்கியமாக இருக்க வேண்டும். கட்சிகளைக் கடந்த நிலையில் சேவையில் ஈடுபடவே நான் விரும்புகின்றேன்.

உங்கள் ஒன்றியம் பக்கச்சார்பற்று இயங்குவதாக எனக்குத் தகவல் கிடைத்தது. எனவே தான் உங்கள் அழைப்பை ஏற்க முன்வந்தேன்.

எங்களோடு அரசியல் ரீதியாகத் தோள் கொடுத்துவரும் சகோதர சகோதரிகளைத் தனித்துச் சந்திக்கச் சம்மதித்தேன். எங்களோடு தொடர்புடைய அனைவரும் இந்தக் கூட்டத்திற்கு வரவேண்டும் என்று ஆசைப் பட்டேன். உங்கள் மாபெரும் வரவேற்பு மனதுக்கு இதத்தை அளிக்கின்றது.

இவ்வாரம் திம்புக்கோட்பாடுகள் வெளிவந்து சரியாக முப்பது வருடங்கள் ஆகின்றன. இன்னுமொரு வாரத்தில் 1983 ஆம் ஆண்டின் கறுத்த ஜூலை மாதம் நிகழ்ந்து 32 வருடங்கள் பூர்த்தியடைய இருக்கின்றது.

சரியாக ஒரு மாத காலத்தில் எமது நாட்டின் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில்த்தான் நான் உங்களை இங்கு சந்திக்கின்றேன்.

நீங்கள் யாவரும் புலம் பெயர்ந்தவர்கள் என்ற அடைமொழிக்கு உட்பட்டவர்கள் என்றாலும் உங்களுள் பலர் உங்கள் பிறந்தகத்தைப் புறக்கணித்து இங்கு வந்தவர்கள் அல்ல. மனதாலும் உடலாலும் புண்பட்டு வந்தவர்கள்.

எனினும் பிறந்தகத்திற்கும் உங்களுக்கும் இடையில் பிணைப்பொன்றைப் பேணிப் பாதுகாத்து வருபவர்கள். சிலருக்கு இன்னும் காணிபூமிகள் அங்கு இருக்கின்றன. பலருக்கு வளமான உறவுகள், உற்றார், உறவினர்கள் இருக்கின்றனர்.

வருடங்கள் பல கழிந்தும் உங்கள் ஆரம்ப கால வாழ்விடங்களுக்குத் திரும்பிச்செல்ல உளமார ஏங்கித்தவிக்கும் பல உறவுகளுடன் நான் கலந்துறவாடியுள்ளேன். அவர்கள் இப்பொழுதும் தமது உறவுகளைப் புதுப்பித்து உற்றார் உறவினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அந்த உறவுகளுக்கு மறுமலர்ச்சி ஊட்டவே இன்னும் விருப்பம் உடையவராக உள்ளனர்.

ஆனால் உங்கள் வழித்தோன்றல்கள் எவ்வாறான கருத்துடையவர்கள் என்பதை நான் அறியேன். இங்கு பிறந்த இளவல்கள் பலர் இங்கிலாந்தில் இருக்கின்றார்கள். இந்தத் தரணியில் பல இடங்களில் இருக்கின்றார்கள். இன்று இந்த அரங்கிலும் இருப்பதாக அறிகின்றேன்.

இவர்களுள் பலர் தமது பெற்றோரின் அல்லது அவர்தம் மூதாதையரின் பிறந்த மண்ணின் அடையாளத் துடன் தம்மையும் இணை த்தே வாழ்ந்து வருகின் றார்கள் என்று அறிய வந் துள்ளேன்.

இந்த ஈடுபாடு மென்மேலும் தமிழ் இளைய சமுதாயத்தினரிடையே வலுக்க வேண்டும் என்பது எனது விருப்பம். எமது தேசத்தில் வாழும் இன்றைய சந்ததிக்கும், இலங்கைத் தீவுக்கு வெளியே வாழும் இன்றைய சந்ததிக்கும் இடையிலான தொடர்பு மலர்ச்சி அடைய வேண்டும்.

அது இன்னும் ஆழமாக வேரூன்ற வேண்டும் என்பது எனது அவா. எமது தேசத்திலும் வெளி நாடுகளிலுமுள்ள அடுத் தடுத்து வரும சந்ததிகளுக்கிடையிலான தொடர்புகள் மிக நெருக்கமாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற எனது கருத்தையும் மிக ஆணித்தரமாக இங்கு வெளியிடுகின்றேன்.



இதற்காக எமது இளைய சமுதாயத்தினரை நாம் தயார்படுத்த வேண்டும். அவர்கள் எங்கே பிறந்து எங்கே வாழ்ந்தாலும், அவர்களது பெற்றோர்களின் அவர்களின் மூதாதையர்களின் பிறந்த மண அவர்களுக்கான அடிப்படை அடையாளங்களில் ஒன்று. அந்த அடையாளத்திற்கு ஒரு தனித்துவம் இருக்கின்றது. வலு இருக்கின்றது. அந்த வலுவானது எமது அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

எமக்குப் புலிப்பட்டம் கட்டி, பயங்கரவாதப் பட்டம் கட்டி புகுந்தகத்தில் இருந்து பிறந்தகத்திற்கு வராது தடுக்க சதிகள் நடைபெற்று வருவதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இலங்கை நாட்டுத் தமிழர் பாரம்பரியத்தில் பிறந்தவர்கள் என்பதைப் பெருமையுடன் எடுத்துக் கூறும் காலம் மலர வேண்டும். அதைவிட உலகரீதியான பெருமை மிக்க தமிழர் பரம்பரையின் பலத்த அலகுகள் நாம் என்பதையும் எம் சிந்தனையில் நாம் வேரூன்றி வைக்க வேண்டும்.

அழகிய இலங்கைத் தீவில் வாழும் இனங்கள் அமைதியாகவும், அன்பாகவும், ஆனந்தமாகவும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் வாழவேண்டும் என்பது எனது விருப்பம். அதற்காக நான் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றேன்.

எதிர்காலத்திலும் முடியுமானவரையில் இதற்காக மென்மேலும் பணியாற்ற வேண்டும் என திடசங்கற்பம் பூண்டுள்ளேன். அதே வேளை, தமிழ் மக்கள் தங்களுடைய தேசத்தில் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதிலும் நான் உறுதியாக இருக்கின்றேன்.

பன்னெடுங்காலமாக எமது இனத்தின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகவும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் நாம் பல்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கின்றோம். ஆயினும், எமது காலத்தில் எமது மக்களுக்கான உரிமையோ நீதியோ உள்நாட்டில் கிடைக்காது என்பதனை தென்னிலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் புலப்படுத்திக் கொண்டு வந்துள்ளன.

ஆதலால்த்தான், எமது காலத்தில் உறுதியான ஜனநாயக அத்திபாரத்தை இட்டு, எமது எதிர்கால சந்ததியிடம் இந்தப் பணியைத் தொடர்வதற்கு அவர்களிடம் கையளிக்கும் வண்ணம் நாம் விரைந்து பணியாற்ற வேண்டியிருக்கினறது.

எமது மக்கள் தமது உரிமையையும் நீதியையும் பெறுவதற்குச் சர்வதேச ரீதியான ஆதரவு இன்றியமையாதது. அந்த ஆதரவை பெற்றுக் கொள்வதற்கும் பெருக்கிக் கொள்வதற்கும் உலகெங்கும் பரந்து வாழும் இளைய தமிழ் சமுதாயம் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்த முன்வர வேண்டும்.

இதற்கான, அடித்தளத்தை அமைக்க அவர்தம் பெற்றோர்கள் முன்வரவேண்டும். இங்கே வாழும் இளைய சமுதாயத்தி னர் தாம் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, ஜனநாயக ரீதியில், இலங்கைத் திருநாட்டில் வாழ்கின்ற தமது சொந்தங்களின் உரிமைக்காகவும் நீதிக்காகவும் போராட முடியுமென்று நான்நம்புகின்றேன.

ஒருபுறம் எமக்கான உரிமை எமது தேசத்தில் மறுக்கப்பட்டுள்ளது. மறுபுறம், தமிழ் இனத்துக்கு எதிரான இனஅழிப்பு நிறுத்தப்படவில்லை என்பதையுங் காண்கின்றேன். இவ்வருடம் ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர்கூட வெள்ளைவான் வெறியாட்டங்கள் நடைபெற்றுள்ளதாக இங்கு வந்தபின்னர் அறிந்து கொண்டேன். ஒன்பது சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன.

எமது இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பை வெளிக்கொணரும் தீர்மானத்தை நிறைவேற்றியதால் நான் கடும்போக்கு நிலை எடுத்துள்ளதாகச் சாடுகிறார்கள சிலர். தமிழின அழிப்பு என்ற உண்மையை உலகறியச் செய்வதால் நீண்ட கால நோக்கில் இனங்களுக்கிடையில் இதயசுத்தியுடனான நல்லெண்ணம் ஏற்படுவதற்கு அது வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கை.

இன அழிப்பு தீர்மானத்தை வட மாகாண சபையில் கொண்டுவந்து ஆற்றிய உரையிலும் இதனை நான் தெளிவாகக் கூறியுள்ளேன். நாங்கள் பழிவாங்கும் மனநிலையோடு செயற்படவில்லை. மாறாக, பல்லாயிரக்கணக்கில் பலியெடுக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதிகிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் செயற்பட்டுள்ளோம்.

எமது மக்களைப் பற்றி சிந்திப்பவர்களும், மனிதாபிமானத்தை நேசிப்பவர்களும் எமது நடவடிக்கைகளுக்கு உதவுவார்களே தவிர உபத்திரவமாக இருக்க மாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

தமிழினத்துக்கு நடந்த இனஅழிப்பை வெளிப்படுத்தத் தயங்கும் அல்லது தடுக்கும் தமிழர்கள் தொடர்பாக அவர்களின் அரசியல் நெறி தொடர்பாக எமது மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும்.

அண்மையில் அமெரிக்க அலுவலர் நிஷா அவர்கள் என்னை அவமதித்துக் கதைத்ததாக ஒரு பத்திரிகைச் செய்தி வந்தது. இன அழிப்பை அடக்கி வாசிஎன்று கூறியதாக செய்தி வந்தது. அது முற்றிலும் தவறான செய்தி. (தொடரும்)

-தமிழ்வின்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர்களுக்காக போட்டியிடுகின்றோம்

## ஞானசார தேரர் தெரிவிப்பு



(கொழும்பு)

**சிங்களவர்களுக்காகவே நாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

பொதுபல சேனா அமைப்பு இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன என்னும் கட்சியாக போட்டியிடுகின்றது.

நாடாளுமன்றில் சிங்கள அடையாளங்கள் மருவிப் போயுள்ளன. சிங்களவர்களின் உரிமைகள் குறித்து குரல் கொடுக்கும் போது அது இனவாதமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இது ஓர் துரதிர்ஷ்டவசமான நிலைமையாகவே கருதப்பட வேண்டும்.

சிங்களவர்களுக்கு இல்லாத உரிமைகள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு நாட்டில் காணப்படுகின்றது.

சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றி குரல் எழுப்பும் போது அது உரிமைக் குரலாக அடையாளப்படுத்தப்படுகின்றது. எனினும், சிங்கள உரிமைகள் பற்றி பேசும் போது அது இனவாதமாக குற்றஞ் சுமத்தப்படுகின்றது.

நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளாக காணப்பட்ட சிங்கள பௌத்த கலாசார அடையாளங்களை மறந்து அரசியல்வாதிகள், இலங்கை கலாசாரம் பற்றி வித்தியாசமாக உபதேசிக்கின்றனர்.

இந்த நிலைமையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஞானசார தேரர் சிங்களப் பத்திரிகையொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐக்கிய தேசியக் கட்சியின்

# பிரசாரப் பணிகளில் பிரித்தானிய நிபுணர்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார பணிகளுக்காக பிரித்தானிய நிபுணர் ஒருவர் அழைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் பிரசாரம் தொடர்பில் நிபுணத்துவமுடைய ஒருவர் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த பிரித்தானிய பொதுத் தேர்தலில் பிரதமர் டேவிட் கமரூனின் பிரசாரப் பணிகளுக்கு பொறுபபாக செயற்பட்ட கொஸ்பி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அழைப்பில் அவர் இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரப் பணிகளின் பிரதான ஆலோசகராக கொஸ்பி கடமையாற்றுவார் என குறித்த கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## குடும்பத்தினரை பாதுகாக்கவே மகிந்த தேர்தலில் போட்டி

# அநுரகுமார குற்றச்சாட்டு



பல்வேறு குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தமது குடும்பத்தினரை பாதுகாக்கும் நோக்கிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுத தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.


ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கிரிபத்கொடையில் இடம்பெற்ற பிரசாரத்தின் போது உரையாற்றிய அவர், மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் எதிராக ஏற்கனவே பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இத்னை தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே அவர் தேர்தலில் போட்டியிடுவதாக திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எனக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

## விமல் வீரவன்ச கூறுகிறார்



தனக்கு எதிராக முகநூல் ஊடாக பல்வேறு சேறுபூசும் சுவரொட்டிகள் பரப்பப்படுகின்ற போதும் தனது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்த முடியாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது மிகவும் மலினமான முயற்சி என்று அவர் தெரிவித்தார்.

தனது புகைப்படங்களுடன் தனது மருமகள்மாரின் படங்களை இணைத்து இந்த சுவரொட்டிகள் பரப்பப்பட்டுள்ளன என்று விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தம்மைப் பற்றி அவதூறு செய்கின்றவர்கள், தமது தாய்மாரையும் சகோதரிகளையும் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று வீரவன்ச கோரியுள்ளார். (இ-7)

## சொகுசு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

### சரத் பொன்சேகா எச்சரிக்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் நல்லாட்சியை முன்னெடுத்து செல்கின்றார். ஆனால் அவரின் கட்சியிலுள்ள பெரும்பாலானோர் ஊழல் மோசடிகளில் சுதந்திரமாக ஈடுபட்டவர்கள். நல்லாட்சி ஏற்படுமானால் அவர்களின் சொகுசு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடும். எனவேதான் அவர்கள் நல்லாட்சியை எதிர்க்கின்றனர் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

மாத்தளை மாமரச்சந்தி பேருந்து நிலைய மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இன்னும் இருக்கிறது

என்னுடைய நண்பர் ஒருவருக்கு ஜாதகத்தில் நல்ல நம்பிக்கை. அவரே ஜோசியம்எல்லாம் பார்ப்பார். இந்தக் காலத்தில் இதையெல்லாம் நம்பிக்கொண்டிருக்கிறீர்களே... என்று கேட்டால்,

"உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் அவர்கள் செய்யும் நல்லது கெட்டதுக்கு ஏற்ப தகுந்த பலனை அனுபவித்தே தீர வேண்டும்" என்பார்.

அது மட்டுமல்ல... ஒருவன் இறந்தால்கூட அவன் செய்த பாவ, புண்ணியங்கள் கூடவே போய்க் கொண்டிருக்கும் என்பார். "அது எப்படி போகும்?" என்று குதர்க்கமாக கேட்டேன். அவர் அதற்கு ஒரு கதை சொன்னார். மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

ஒரு ஊரில் ஒருவர் இருந்தார். அவர் ஜோசியம் பார்ப்பதில் ரொம்ப கெட்டிக்காரர். ஒருவருடைய தலை முடியை வைத்தே அவருடைய ஜாதகத்தை அலசி விடுவார்.

அவர் ஒரு சமயம் கடற்கரைக்குப் போயிருந்தார். அங்கே கரை ஓரமாக ஒரு மண்டையோடு கிடந்தது. அந்த மண்டையோட்டை எடுத்துவைத்து அதன் ஜாதகத்தை அலசியிருக்கிறார்.

அந்த மண்டையோட்டுக்குரிய ஆள் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டு அதை அனுபவிக்க இயலாமல் கடலில் விழுந்து தற்கொலை பண்ணியிருக்கிறான் என்பதை கணித்துவிட்டார்.

இருந்தாலும் அது இன்னும் அனுபவிக்க வேண்டியது மீதமிருக்கிறது என்பதையும் உணர்ந்தார். ஒருவன் உயிரோடு இருந்தால் நல்லது, கெட்டதை அனுபவிக்கலாம். இறந்தபிறகும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதன் அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை.

அந்த மண்டையோட்டை இன்னும் விபரமாக ஆராய்ச்சி செய்வதற்கு தனது வீட்டுக்கே எடுத்துக் கொண்டு போனார். அதை ஒரு பெட்டியில் வைத்துப்பூட்டி தனியறையில் பத்திரமாக வைத்துவிட்டார்.

தினமும் இரவில் மனைவியை பூஜையறையில் தூங்கச் சொல்லிவிட்டு நள்ளிரவு 12 மணிக்கு பெட்டியைத் திறந்து பார்ப்பார்.

மண்டையோடு அப்படியே இருந்தது. ஆனாலும் அந்த மண்டையோட்டுக்கு இன்னும் என்ன அனுபவிக்க மீதமிருக்கிறது என்பது விளங்கவில்லை.

இப்படியே ஒரு பத்து நாட்கள் கழிந்துவிட்டன. மனைவிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. பக்கத்துவீட்டு அம்மாவிடம் விடயத்தைச் சொன்னார். உடனே அந்த அம்மா "நீ கவலைப்படாதே... நான் கண்டுபிடித்து சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டார்.

அன்றிரவே ஜன்னலால் எட்டிப்பார்த்தார். அந்த ஆள் மண்டையோட்டை கையில் வைத்துக்கொண்டு அதைத் திருப்பித்திருப்பி பார்த்துக்கொண்டிருந்தார்.

மறுநாள் காலை அவரின் மனைவியைப்பார்த்து, "உன் வீட்டுக்காரருக்கு நீ முதல் மனைவியா? இரண்டாவது மனைவியா?" என்று கேட்டார். "எனக்குத் தெரிந்த வரையில் நான் ஒருத்திதான் அவருடைய மனைவி" என்றார் அவர்.

அதற்கு பக்கத்துவீட்டு அம்மா என்ன சொன்னார் தெரியுமா? "அப்படியில்லை... நீ அவருக்கு இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் மண்டையோட்டைத்தான் அவர் தினமும் ராத்திரியில் எடுத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றார்.

"அப்படியா விடயம்..." என்று சொல்லிவிட்டு, கணவன் வீட்டில்லாத நேரமாகப் பார்த்து அந்த மண்டையோட்டை ஒரு உரலில் போட்டு உலக்கையால் குத்தி நொறுக்கினார் மனைவி. வெளியில் போயிருந்த கணவன் உள்ளே வந்தபோது, மண்டையோடு உலக்கையிடம் குத்துவாங்கிக் கொண்டிருந்தது.

அது அனுபவிக்க வேண்டியது இன்னும் கொஞ்சம் இருக்கு என்பதற்கு அர்த்தம் அவருக்கு அப்பொழுது தான் விளங்கியது.

இந்தக் கதையிலிருந்து நாம் இன்னொன்றையும் புரிந்துகொள்ள வேண்டும். நமது வீட்டைப்பற்றி நமக்குப் புரியாததெல்லாம் அடுத்த வீட்டக்காரர்களுக்கு நன்றாகப் புரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் மீள் வருகையும் தொடரும் அரசியல் குழப்பமும்



கடந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது சர்வாதிகளும் குடும்ப ஆட்சி, ஊழல், ஜனநாயகம் இன்மை போன்றன நிலவியதால் ஒருசில நேர்மையான சகபாடிகள் உள்கட்சிப் போராட்டத்தை நடத்த முடியாதவர்களாய் விரக்தி நிலையில் இருந்தார்கள்.

புற நிலையாக விலைவாசி உயர்வுகள் ஊழல் மோசடிகள், மனித உரிமை மீறல்கள் பக்கசார்பான வெளியுறவுக் கொள்கை போன்ற காரணங்களால் உள்ளூர், சர்வதேச சக்திகள் கடந்த தை 8 ஆம் திகதி தேர்தலோடு மகிந்தவை வீட்டுக்கு அனுப்ப திட்டம் போட்டார்கள்.

அத்திட்டத்தின்படி மகிந்தவை எதிர்த்துப் போட்டி போடக்கூடிய நல்ல தலைமைத்துவப் பண்புடைய நேர்மையான ஒருவர் தேவைப்பட்டார்.

ஏற்கனவே கட்சியின் பொதுச் செயலாளராக அமைச்சராக விரக்தியுற்றிருந்த மைத்திரிபால சிறிசேன இத்தேவைப்பாட்டை அல்லது இவ்வெற்றிடத்தை நிரப்பினார்.

இத்திட்டத்தின் சூத்திரதாரிகளான ஒரு சில புத்திஜீவிகள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் 46 அமைப்புக்களைச் சேர்த்து பொது எதிரணியை உருவாக்கி மைத்திரிபால சிறிசேனாவை பொது வேட்பாளராக்கினர்.

நல்லாட்சி 100 நாள் வேலைத் திட்டம் என்ற கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் பிரச்சாரம் செய்து இரண்டரை இலட்சம் மேலதிக வாக்குகளால் மைத்திரிபால சிறிசேன கடந்த தை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபாதியானார்.

மகிந்த ராஜபக்ச தனது சதித் திட்டங்களைக் கைவிட்டு, தோல்வியை ஏற்று வீடு நோக்கினார்.

மைத்திரி பாலவிற்கு நகர்ப்புறஞ்சார் சிங்கள மக்களும் வடக்கு, கிழக்கு தமிழர், முஸ்லீம்களும் மலையகத் தமிழர்களும் கூடுதலாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

மைத்திரிபால சிறிசேன தான் ஜனாதிபதியாக வந்தால், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவேன் எனக் கூறினார். அந்த மக்கள் ஆணையின்படி அரசியலமைப்பு பாராளுமன்ற நடைமுறைகளுக்கு மாறாக ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி, அமைச்சரவையையும் உருவாக்கினார்.

100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருள்கள் மற்றும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன. அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. இறுதியாக 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இன நல்லிணக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் வடமாகாண சபையின் கோரிக்கைகள் சில நிறைவேற்றப்பட்டன.

இது இவ்விதமிருக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பதவிக்கு கொண்டு வரும் வகையில் அவரது குழுவினர் நுகேகொடையிலிருந்து அம்பாந்தோட்டை வரை பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு வாங்கக் கூடிய நிலைக்கு அவரது ஆதரவுத் தளத்தை உயர்த்தியுள்ளார்கள்.

எனினும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஒரு சிக்கலான குழப்பமான, பிளவுண்ட சூழ்நிலையிலேயே எதிர்கொள்ளப்போகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியோ மகிந்தவை தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி அரசாங்கம் அமைத்ததோடு தனது பிரித்தாளும் தந்திரோபாயத்தின் மூலம் வீழ்ந்து போய்க் கிடந்த தனது ஆதரவுத் தளத்தை படிப்படியாக வளர்த்து வருகின்றது.

ஆனால், பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளோ, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு என்ற சில காரணங்களுக்காக மகிந்த ராஜபக்சவை தீவிரமாக ஆதரித்து தமது பாராளுமன்ற பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ள பார்க்கிறார்கள்.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணி எந்தப் பக்கமும் சாயாது தனது கொள்கை வேலைத் திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார்கள்.

இதனால் எதிர்வரும் பாராளுமன்றத் ரேர்தலில் கூடுதலான ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் மகிந்த அவையால் மைத்திரி அடக்கப்பட்டுள்ளார் போலத் தெரிகின்றது.

நிகர்தகவு ரீதியாக பழி வாங்கும் பயங்கரவாத அரசியல் பேசி பெரும்பான்மைப் பலத்துடன் மகிந்த ராஜபக்ச பிரதமரானால், மைத்திரிபால அவருடன் இணங்கிப்போக வேண்டிய நிலையே ஏற்படும். இச்சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பே அவருக்கு துணை நிற்கும்.

மகிந்த தோற்பாராயின் ஜனாதிபதி மைத்திரியின் எண்ணம் நிறைவேறும். தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து அல்லது ஐக்கிய தேசிய முன்னணியுடன் அரசாங்கம் அமைத்து அடுத்த ஆறு வருடங்களைக் கொண்டு செல்ல முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலோ தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கூட்டமைப்பு, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, முஸ்லீம் காங்கிரஸ், ஜனநாயகப் பேரணிகள் கட்சி என்பன போட்டியிடவுள்ளதால் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

ஏனெனில், கடந்த காலங்களில் தேர்தலைப் புறக்கணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இம்முறை போட்டியிடுகின்றது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்து தனது வீணைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளனர். இவ்வாறாக களநிலைமை மாறியுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத் தேர்தல் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமானது என வழமை போல் கூறியிருக்கின்றது.

தமிழ்த்தேசிய வாத்தின் பிற்போக்குத் தனம் இன்னும் அதிகரித்தே செல்கின்றது. அதன் விளைவுகளே இன்றைய களநிலைமையாகும்.

தென்னிலங்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ, ஐக்கிய தேசிய முன்னணியோ பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத நிலையில் அரசாங்கத்தை அமைக்க தமது ஆதரவு தேவைப்படலாம் எனக் கூட்டமைப்புத் தலைவர்கள் நினைக்கின்றார்கள்.

அதன்மூலம் பேரம் பேசும் வாய்ப்பும் தமக்கு கிடைக்கும் எனவும் ஊகிக்கின்றார்கள்.

ஆனால், இனி அமையப்போகும் அரசாங்கமோ, தலைவர்களோ பேரம்பேசுவதற்கான சமநிலையான ஆளுமையை, பலத்தை, உறுதிப்பாட்டைக் கொண்டிருப்பது சந்தேகமே.

இத்தகு நிலைமை இரு பகுதியாருக்கும் காலத்தை போக்குவதற்கு பொருத்தமானதே.

இதனால் எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏகபோகம் இல்லாமல் போவதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

மொத்தத்தில் எமது நாடு பிராந்திய சர்வதேச வலைக்குள் சிக்குண்டு நெருக்கடிக்குள்ளாகும் போக்கே தூரத் தெரிகின்றது.

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் தற்கொலை பூமியாக மாறுவதால் அ.தி.மு.க. அமைச்சர்களிடம் நீதி கேளுங்கள்

## கடலூர் பொதுக்கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

**(சென்னை)**

**தமிழகம் முழுவதும் விவசாயிகள், அரசு அதிகாரிகள் உயிரிழப்பு தொடருவதால் அ.தி.மு.க. அமைச்சர்களிடம் நீதி கேளுங்கள் என்று தி.மு.க.பொருளாளர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



கடலூர் மாவட்டம் புதுச்சத்திரத்தில் தி.மு.க. சார்பாக 'நீதி கேட்கும்' பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்துக்கு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எம்.ஆர். கே.பன்னீர் செல்வம் தலைமை வகித்தார்.

மேற்கு மாவட்ட செயலாளர் கணேசன் வரவேற்றார். புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர்கள் மற்றும் தமிழக மாவட்டங்களைச் சேர்ந்த செயலாளர்கள் 14 பேர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் புதுச்சேரி, காரைக்கால், விழுப்புரம், தஞ்சை, நாகை, திருவாரூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.கவினர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது, அவர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட உதயகுமார் என்பவரை மேடையில் அறிமுகம் செய்தார். பின்னர்,

அவர் பேசியதாவது, கடந்த 4 ஆண்டுகளாக தமிழகத்தில் நடைபெறும் அ.தி.மு.க. ஆட்சியில் துயரங்களும், துன்பங்களும்தான் நிறைந்துள்ளன. வீடு, நிலம் வாங்க முடியவில்லை, விற்க. முடியவில்லை. பணப் புழக்கம் முடங்கிவிட்டது. முறையாக தேர்தல் நடத்த வேண்டிய தேர்தல் ஆணையமும் எதற்காக இப்படி தேர்தல் நடத்தியது என்பது அனைவருக்கும் தெரியும்.

தொகுதிக்கு தலா 12 ஆயிரம் தி.மு.க. வாக்காளர்களை குறி வைத்து வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி வருகின்றனர். உயிரோடு இருப்பவரை இறந்துவிட்டதாக கூறி நீக்கி உள்ளனர்.

சென்னை பூந்தமல்லியில் வாக்காளர் பட்டியலில் இறந்தவராக தேர்தல் ஆணையம் அறிவித்து நீக்கிய உதயகுமார், இதோ மேடையில் உங்கள் முன் இருக்கிறார். நான் அனைத்தையும் ஆதாரத்துடன் பேசுகிறேன்.

இந்த ஆட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. அனைத்துக்கும் நீங்கள் நீதி கேட்பீர்களா? இந்த ஆட்சியில் மக்களிடம் பணம் இல்லை. அரசிடமும் இல்லை.

ஆனால், ஆட்சியிலும் அதிகாரத்திலும் உள்ளவர்களிடம் மட்டும் பணம் உள்ளது.

4 ஆண்டில் விவசாயிகள், நெசவாளிகள், அரசு அதிகாரிகள் பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தமிழகம் தற்கொலை பூமியாக மாறி வருகிறது. காவிரி டெல்டா பகுதியில் உள்ள வாய்க்கால்கள் தூர்வாரப்படவில்லை. இவை அனைத்துக்கும் தமிழக அ.தி.மு.க. அமைச்சர்களிடம் நீதி கேளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேரோட்ட நெரிசலில் சிக்கி 2 பெண் பக்தர்கள் பலி!

## 10 பேர் படுகாயம்

பூரி ஜெகநாதர் கோவில் தேரோட்ட நெரிசலில் சிக்கி 2 பெண் பக்தர்கள் பலியானார்கள். 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஒடிசா மாநிலம் பூரி நகரில் பிரபலமான ஜெகநாதர் கோவில் உள்ளது. இங்கு 9 நாட்கள் நடைபெறும் தேரோட்டத் திருவிழா உலக பிரசித்தி பெற்றது.

இந்த திருவிழாவின் போது, பிரதான கோவிலில் இருந்து உற்சவர்களான பலபத்திரர், ஜெகநாதர், சுபத்திரைதேர்கள் 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கண்டீசா கோவிலை சென்றடையும். இதை காண்பதற்கு இந்தியா முழுவதிலும் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் பூரியில் குவிவது வழக்கம். இந்த தேரோட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது.

**2 பெண்கள் பலி**

இதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் பலபத்திரரின் தேரான 'தலதுவாஜா'அங்குள்ள கிராண்ட் ரோடு பகுதியில் வந்து கொண்டிருந்தது. அந்த தேர் பாலகண்டி சதுக்கம் என்னும் இடத்தை நெருங்கிய போது பக்தர்கள் முண்டியடித்துக் கொண்டு தேரை நோக்கி ஓடினர். அப்போது ஏற்பட்ட நெரிச லில் சிக்கி ஏராளமானோர் கீழே விழுந்தனர். ஒரே நேரத்தில் அவர்களை மிதித்துக் கொண்டு பக்தர்கள் ஓடினர். இதில் ஒரு பெண் பக்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதேபோல் மாரிக்கோட்சாக் என்ற இடத்தில் ஏற்பட்ட நெரிசலிலும் பெண் ஒருவர் பரிதாபமாக இறந்தார். இந்த 2 சம்பவங்களிலும் 10 பக்தர்கள் படுகாயமடைந்தனர்இவர்கள்உடனடியாகமீட்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (இ-7)

# கூட்டணி கட்சிகளுடன் பிரதமர் ஆலோசனை

(புதுடில்லி)

முன்னாள் ஐ.பி.எல். தலைவர் லலித்மோடி விவகாரம், வியாபம் ஊழல் உட்பட பல்வேறு பிரச்சினைகளால் ஆளும் பா.ஜனதா கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரங்களை பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் எழுப்ப காங்கிரஸ், கம்யூனிஸ்டு போன்ற எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

எனவே இதற்கு பாராளுமன்றத்தில் பதில் அளிப்பது, எதிர்க்கட்சிகளின் சவால்களை சந்திப்பது குறித்து ஆலோசனை நடத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முந்தைய தினமான இன்று மாலை இந்த கூட்டம் நடைபெறும்.

மோடி ஆட்சி பொறுப் பேற்ற பின்னர் கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெறுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டடம் இடிந்து விழுந்ததில் 5 பேர் உடல் நசுங்கிப் பலி

(புதுடில்லி)

டில்லியில் 4 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டதில் 5 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிறுமி சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மேற்கு டில்லியில் உள்ள காயலா என்ற இடத்தில் விஷ்ணு கார்டன் என்ற வளாகத்தில் இருந்த 4 மாடி கட்டடம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் திடீரென இடிந்து விழுந்தது.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் 8 தீயணைப்பு வாகனங்களில் வீரர்கள் விரைந்து சென்றனர்.

தேசிய பேரிடர் மீட்பு படையினர், உள்ளூர் பொலிஸார் ஆகியோரும் அங்கு விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இடிபாடுகளில் சிக்கி 4 பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். இன்னும் சிறுமி ஒருவர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.



இச்சம்பவத்தில் காயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொடர்ந்து மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. 8 தீயணைப்பு வாகனங்கள் விபத்து நடைபெற்ற இடத்தில் உள்ளது. டில்லி பொலிஸார் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஆகியோர் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு

# மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை 24ம் திகதி ஆரம்பம்

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்கும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய 4 பேரையும் பெங்களூர் உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு சார்பில் கடந்த மாதம் 23ம் திகதி உச்சநீதிமன்றில் மேல் முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டது.

அதில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டு 11ம் திகதி மீண்டும் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதுபோல தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் சார்பிலும் உச்சநீதிமன்றில் மேல் முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டது.

அதிலும் உச்சநீதிமன்றம் சுட்டிக் காட்டிய 9 பிழைகள் திருத்தப்பட்டு மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த 2 மனுக்களும் கடந்த 16 ம் திகதி விசாரணைக்கு ஏற்கப்பட்டு எண் வழாங்கப்பட்டது.

இந்த வழக்கில் தொடர்புடைய 6 நிறுவனங்கள் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து அன்பழகன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை ஏற்பது குறித்தும், உச்சநீதிமன்ற பதிவாளர் அலுவலகம் பரிசீலனை செய்து வந்தது.

இந்தநிலையில், மேன் முறையீட்டு மனு மீதான விசாரணை தொடங்கும் திகதி இன்று அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படி மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை எதிர் வரும் 24 ம் திகதி தொடங்கும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்திலிருந்து பதவிவிலகும் 15 சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள்?


ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை அமைச்சுப் பதவிகளில் இருந்து இராஜினர்மா செய்யுமாறு, கட்சியின் தேர்தல் செயற்பாட்டின் முக்கியஸ்தர் அழுத்தம் கொடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வெற்றிக்காக இணைய வேண்டாம் எனவும் கட்சி தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அண்மையில் ஆற்றப்பட்ட உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைச்சுப் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்யுமாறு அழுத்தம் கொடுத்துள்ளார்.

கட்சியை காட்டிக்கொடுத்த தலைவரின் கீழ் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டு வர கூடாதென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கிளை ஒன்றியம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய மீதமாக உள்ள 20 பேர்களில் 15 பேர் மாத்திரம் தேர்தல் நடவடிக்கைகளின் இடையில் இராஜினாமா செய்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இரண்டு சந்தர்ப்பங்களில் சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற 7 உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் வகையில் தங்கள் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துகொண்டனர். (இ-7)




# மைத்திரியின் கருத்து சு.க. வெற்றியை உறுதி செய்யும்

## பசில் ராஜபக்ஷ நம்பிக்கை

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்றாலும் மகிந்த ராஜபக்ஷக்கு பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய கருத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையே வெற்றி பெறச் செய்யும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



மைத்திரியின் கருத்து குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் மேலும் கீழும் குதித்து வருகின்றனர்.

எனினும், இந்தக் கருத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பை உறுதியாக்கியுள்ளது.

எனினும் சொந்தக் கட்சியின் வேட்பாளர் தோல்வியடைவார் என கட்சியின் தலைவர் குறிப்பிடுவது மிகவும் பாரதூரமானது. இதனால் ஜனாதிபதிக்கும் அவரை சுற்றியிருக்கும் தரப்பினருக்கும் பாரிய பாதகம் ஏற்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி குறித்து பிரசாரம் செய்த போதிலும் நினைவிருக்கும் நாளில் தனியாக ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியதில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உதவியினால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியதாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆற்றிய உரை தொடர்பில் வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர் காணலில் பசில் இதனை தெரிவித்தார். (இ-7)

## தமிழர்களின் குடியுரிமைக்கு கனடாவில் பாதிப்பு இல்லை!

(ரொரன்ரோ)


கனடாவில் தமிழர்களிற்கு குடியுரிமைப் பாதிப்பு ஏற்படும் எனும் செய்தியை வெளியிட்டவர்களின் நோக்கம் தமிழ்க் கனேடியர்கள் பற்றிய தவறான செய்தியைப் பரப்புவதாகவும், தமிழ் மக்களைத் திசை திருப்புவதாகவும் அமைந் துள்ளது எனக் கனேடியத் தமிழ்க் கன்சவேட்டிவ் அமைப்புத் தெரிவித்துள்ளது

அண்மையில், கனடாவில் தமிழர்களிற்கு குடியுரிமைப் பாதிப்பு ஏற்படும் என்ற தொனிப்பட வெளிவந்த செய்தியில் கனடாவில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் அது தவறானது என்று கனடாவின் குடிவரவு அமைச்சர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக கனேடியத் தமிழ் கன்சவேட்டிவ் அமைப்பு விடுத்த அறிக்கையில், தனது கருத்தைப் பதிவு செய்துள்ள கனேடியக் குடிவரவு அமைச்சர் கிறிஸ் அலெக்ஸ்சான்டர் தெரிவிக்கையில்,

கனேடியப் பிரஜைகள் சகலரும் ஒரே மாதிரியாகவே நடத்தப்படுகின்றார்கள். கனேடியக் குடியுரிமையில் இரண்டாந்தரப் பிரஜாவுரிமை என்று ஒன்றில்லை.



இது தொடர்பான செய்திகளை நாங்கள் அடியோடு மறுக்கின்றோம்.

உண்மைக்குப் புறம்பான இச் செய்தியை வெளியிட்டவர்களின் நோக்கம் தமிழ்க் கனேடியர்கள் பற்றிய தவறான செய்தியைப் பரப்புவதாகவும், தமிழ் மக்களைத் திசைதிருப்புவதாகவும் அமைந்துள்ளது எனக் கனேடியத் தமிழ்க் கன்சவேட்டிவ் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இப்பொழுது கனடாக் குடியுரிமையைப் பெறுபவர்கள் தொகை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. கடந்த வருடத்தில் 2இலட்சத்து 61 ஆயிரம் பேர் கனேடியக் குடியுரிமையைப் பெற்றுள்ளார்கள்.

இதுவே இதுவரை காலத்திலும் ஒரு குறித்த ஆண்டில் அதிகம் பேர் குடியுரிமையைப் பெற்ற ஆண்டாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கனேடியக் குடியுரிமையை இழக்கும் சந்தர்ப்பத்தைக் கொண்டுள்ள இரட்டைப் பிரஜைகள் யாரென்றால், மேற்படி பிரஜைகள் பயங்கரவாதத்தில் தொடர்பான எந்தச் செயலிலும் ஈடுபடுதல், கனடாவிற்கு எதிராக அல்லது கனேடியப் படைகளிற்கு எதிராகப் போராடுதல் அல்லது உளவு பார்த்தல் அல்லது தேசவிரோதக் குற்றச்செயல்களில் ஈடுபடுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டவர்களேயாகும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கட்சி ஆட்சியமைத்தால் வெளிநாட்டு முதலீடு கிடைக்கும்

## விஜயதாஸ ராஜபக்ஷ நம்பிக்கை

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் நிறுவப்பட்டால் பாரியளவு வெளிநாட்டு முதலீடு கிடைக்கும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



இலங்கை தொடர்பில் வெளிநாடுகளுக்கு காணப்படும் நம்பிக்கையற்ற தன்மையினால் அதிகளவு முதலீடுகளோ கடன்களோ கிடைக்கவில்லை.

கடந்த ஆறு மாத காலத்திலும் இலங்கையில் ஸ்திரமற்ற ஓர் ஆட்சி நிலவியதாகவே வெளிநாடுகள் கருதின. இதனால் உதவிகள் பெருமளவு கிடைக்கவில்லை. எனினும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சிலர் துரோகி, காட்டிக் கெடுத்தவர் என குற்றம் சுமத்தினாலும் அரசியல் ஞானத்துடன் மிகுந்த தெளிவுடன் அவர் செயற்பட்டு வருகின்றார். அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் மூலம் இந்த விடயம் தெளிவாகியுள்ளது.

கடந்த ஆட்சியாளர்களினால் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள பணம் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், சர்வதேச உதவியுடன் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணம் மீள கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு நேர்காணலில் விஜயதாச ராஜபக்ஷ இந்த விடயங்களை வெளியிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்கள் வாக்காளர்களை அழைத்து உபசரிக்கக் கூடாது!

## (கொழும்பு) —————— தேர்தல் செயலகம் அறிவிப்பு

**வேட்பாளர்கள் வாக்காளர்களை அழைத்து உபசரிப்புக்களை வழங்குவது தடை செய்யப் பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.எல். ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், வாக்காளர்கள் அல்லது அரச உத்தியோகத்தர்களை வீட்டுக்கு அழைத்து உபசரிப்பது, எதிர் வேட்பாளர்கள் பற்றி போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய பிரசாரங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

வேட்பாளர்களுக்கான ஒழுக்க விதிகளை அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

வேட்பாளர்களுக்கான ஒழுக்க விதிகள் பற்றி 2012ம் ஆண்டு முதல் பேசப்பட்டாலும் அது அமுல்படுத்தப்படவில்லை.

எனினும் இந்த ஆண்டு தேர்தலின் போது இந்த ஒழுக்க விதிகள் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

எவ்வாறெனினும் ஒழுக்க விதியாக இது அறிவிக்கப்பட்ட போதிலும் இதனை ஓர் சட்டமாக கருதப்பட முடியாது என மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆங்கில பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# கோத்தபாயவின் உயிரை நான்தான் காப்பாற்றினேன்

## மேர்வின் சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை காப்பாற்றிய முறையினை வெளிப்படுத்தியுள்ளார்.

தான் கூறுவது பொய் என்றால் கோத்தபாயவிடம் கேளுங்கள் என்று அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் 1970 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒன்றாகும். முதல் தடவையாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொது தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் இடம்பெற்றதாகும்.

அந்த சந்தர்ப்பத்தில் மகிந்தவின் பிரதான பேச்சாளராக இருந்தது நான், மகிந்த ராஜபக்ஷவின் மேடைகளில் கவிதை பாடினேன்.

குறித்த சந்தர்ப்பத்தில் எனக்கும் எனது குழுவினருக்கும் கெட்டமான்ன பிரதேசத்தில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது, அக்குழுவினருக்கு இடையில் கோத்தபாய ராஜபக்ஷவும் இருந்தார்.

அங்கு எனது குழுவுக்கு தாக்குதல் மேற்கொண்டவர்களை தாக்கி கோத்தபாயவை காப்பாற்றியது நான் என மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த வெளிநாட்டு பயணங்களுக்காக 3 ஆண்டுகளில் 785 மில். செலவிட்டார்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு பயணங்களுக்காக மூன்று ஆண்டுகளில் 785 மில்லியன் ரூபாவினை செலவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் ஊடாக இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் போது பயணம் செய்யும் விமானம் முழுமையாக அவரது பயணங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக அவர் பயணம் செய்யும் விமானம், விஜயம் பூர்த்தியாகும் வரையில் வேறு பயணங்களுக்கு பயன்படுத்தப்படவில்லை.

2012, 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளில் ஜனாதிபதி மகிந்தவின் வெளிநாட்டு விஜயத்திற்காக 785 மில்லியன்ரூபா செலவிடப்பட்டுள்ளது.

சுமார் 90 தடவைகள் விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கன் விமான நிலையத்தின் அதி சொகுசு விமானத்தை மகிந்த தொடர்ச்சியாக பயன்படுத்தி வருவதனால், ஏனைய பயணிகளுக்கு பயணம் செய்யவோ அல்லது நிறுவனத்திற்கு இலாபமீட்டவோ முடியாத சூழ்நிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# பொதுத்தேர்தலில் 150 பிக்குமார் போட்டி

பொதுத் தேர்தலில் இம்முறை சுமார் 150 பௌத்த பிக்குகள் போட்டியிடுவதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.எல். ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.


இலங்கையின் நாடாளுமன்ற தேர்தல் வரலாற்றில் அதிகளவான பௌத்த பிக்குகள் போட்டியிடுவது இதுவே முதல் முறையாகும்.

பௌத்த பிக்குமார் தேர்தலில் போட்டியிடுவதால், வாக்கெடுப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவிருந்த சுமார் 150 பௌத்த விகாரைகள் அதில் இருந்த நீக்கப்பட்டுள்ளதா கவும் ரட்நாயக்க மேலும் தெரி வித்தார். எதிர்வரும் பொதுத் தேர்த லில் பொதுபல சேனா அமைப்பின் அரசி யல் கட்சியான பொதுஜன பெரமுன போட்டியிடுகிறது.

இதில் கலகொட அத்தே ஞான சார தேரர் உட்பட அதிகளவிலான பிக்குமார் போட்டியிடுகின்றனர். (இ-7)

# அணி சாராதவன் என்பதனால்தான் அ'புரக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை

## அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



மைத்திரி அல்லது மகிந்த அணியின் உறுப்பினர் இல்லை என்ற காரணத்தினாலேயே தாம் அநுராதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பணிகள் சம்பந்தமாக அநுராதபுரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தா.


நான் எந்த அணியையும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. அத்துடன் வேறு ஒரு நபருக்காக குரல் கொடுப்பதுமில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையே நான் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்.

இதன் காரணமாக அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என துமிந்த திஸாநாயக்கமேலும்தெரிவித்தார்.

பொது வேட்பாளராக போட்டியிடும் நோக்கில் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்த வெளியேறிய போது, அவருடன் இணைந்து அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவர்களில் துமிந்த திஸாநாயக்கவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாதரவத்தை மாணவி தேசிய மட்டத்திற்கு தெரிவு



வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதின் கீழ் பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவி சந்திரகுமார் கஜனி முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப்பெற்றுக் கொண்டு தேசிய மட்டத்திற்குத் தெரிவானார். (கு)

# இமையாணன் இளைஞர் இறுதிப்போட்டிக்கு தகுதி



இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் இமையாணன் இளைஞர் அணி காலிறுதியில் கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தையும் அரையிறுதிப் போட்டியில் உடுவில் சலஞ்சர்ஸ் அணியினையும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதியானது. (கு)

# மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டி

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப்போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி இரண்டாவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

குறித்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊவா மாகாண சபை விவசாய அமைச்சர் செனரத் அத்தநாயக்க (மாற்றுத் திறனாளி) கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வலுவிழந்தோருக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி, முச்சக்கரவண்டி ஓட்டம் என்பன வீதி நிகழ்வாகவும் மென்பந்து துடுப்பாட்டம், சக்கர நாற்காலி ஓட்டம், மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் உட்பட பல உள்ளக விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

நேற்றைய தினம் மென்பந்து துடுப்பாட்டம் மற்றும் கூடைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. (கு)

# யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி முகாம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் கடந்த சனிக்கிழமை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் பருத் தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் எம்.நவநீதமணி தலைமையில் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர்களுக்கான பணிப்பாளர் யாப்பா, பயிற்றுவிப்பாளர் வடிவேலு மற்றும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா.நவரத்தினராசா, யாழ். மாவட்ட விளையாட்டுத் திணைக்கள உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் எம்.முகுந்தன், முன்னாள் செயலாளர் சிவராஜலிங்கம் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். வலிகாமம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வடமராட்சி உதைபந்தாட்ட லீக்குகளின் மத்தியஸ்தர்கள் இப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டார்கள். (கு)

# வானவில் விளையாட்டுக் கழகத்தின் மென்பந்து சுற்றுப்போட்டி ஆரம்பம்



கிளிநொச்சி பெரிய பரந்தன் வானவில் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் வானவில் விளையாட்டுக்கழக மைதானத் தில் ஆரம்பமாகியது.

மாவட்டத்தைச் சேர்ந்த 18 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் மென்பந்து சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மென்பந்து சுற்றுப்போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

வானவில் விளையாட்டுக்கழக தலைவர் சாந்தன் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில்வடக்குமாகாண சபைஉறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் மனோகரன், கரைச்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் குமார் மற்றும் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக்கழக வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (கு)




கடந்த வாரம் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் மு / கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் ஜெ.யதுர்ஷனா 13 வயது பெண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் முதலாம் இடத்தையும் 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவரைப் பாராட்டும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் த.கமலதாசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இரவீந்திரனும் விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) மைக்கல் திலகராஜாவும் மற்றும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கோரஸ்டிலானும் கலந்து கொண்டனர்.

# பார்முலா 1 கார் பந்தய வீரர் மரணம்







பிரான்சின் முன்னணி கார்ப்பந்தய வீரராக திகழ்ந்த ஜுல்ஸ் பியாஞ்சி பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

25 வயதான இவர் கடந்த ஒக்டோபர் மாதம் ஜப்பானில் நடைபெற்ற க்ராண்ட்ப்ரிக்ஸ் போட்டியின்போது விபத்தில் சிக்கினார்.

தலையில் பலத்த காயமடைந்த ஜுல்ஸ் கோமா நிலைக்கு தள்ளப்பட்டார். 9 மாதங்கள் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் நினைவு திரும்பாமலேயே அவரது உயிர் பிரிந்தது.

பியாஞ்சியின் பிரிவால் ஏற்பட்ட வலி விபரிக்க முடியாத ஒன்று என அவரது குடும்பத்தினர் கண்ணீருடன் கூறியுள்ளனர்.

இவர் சர்வதேச அளவில் கார் பந்தயத்தில் மூன்று முறை சம்பியன் பட்டத்தை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# தந்தையானார் ஷமி

இந்திய வேகப்பந்துவீச்சாளர் முகமது ஷமி காயம் காரணமாக ஓய்வெடுத்து வருகிறார்.

கொல்கத்தா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவரது மனைவி ஹசின் ஜஹா ஹாசினுக்கு அழகிய பெண் குழந்தை பிறந்தது.

தாயும் மகளும் நலமாக இருக்கிறார்கள், குழந்தை மிக அழகாக உள்ளது என முகமது ஷமி தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக ஷமிக்கு மூட்டு பகுதியில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதையடுத்து பெங்களூர் தேசிய அகடமியில் பிசியோதெரபி சிகிச்சை பெற்று வருகிறார்.

மீண்டும் தென் ஆபிரிக்க அணியின் இந்திய சுற்றுப்பயணத்தில் தேசிய அணியில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கத்துக்குப் புரிவது
சட்டத்திற்குப் புரியாது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஏகலைவனின் கட்டை விரலை துரோணர் பெற்றதில் தவறில்லை

துரோணாச்சாரியார் பற்றி அறியாதவர்கள் இருக்கமுடியாது. பாரத இதிகாசத்தில் துரோணர் மிகச் சிறந்த வில்வித்தை நிபுணர்.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருவாக இருந்து வில் வித்தையை போதித்த துரோணாச்சாரியரால்தான் பாரதப்போர் நடந்தது.

துரோணரிடம் வில்வித்தை பயில வேண்டும் என ஏகலைவனின் ஆசையை துரோணர் நிறைவேற்றவில்லை. துரோணரைத் தன் மானசீகக் குருவாகக் கொண்டு வில் வித்தையை ஏகலைவன் கற்கிறான்.

ஒருநாள் தன் குருவின் சிலையை நாய் ஒன்று அசிங்கப்படுத்தி விட்டது. இதனால் ஆத்திரமடைந்த ஏகலைவன் நாய் மீது அம்பு தொடுக்கிறான். நாய் உயிரிழந்து போகிறது. நாயின் உடலில் ஆயிரம் துளைகள். அம்புபட்டு நாய் ஒன்று இறந்து கிடப்பதை துரோணர் காண்கிறார்.

என்ன அதிசயம்! ஓர் அம்பில் ஆயிரம் துளைகள். அருச்சுனனுக்கு மட்டுமே சொல்லிக் கொடுத்த இந்த வித்தையை கற்றது யார்? யாரிடம் கற்றது? என்ற கேள்வி துரோணரை துளைக்கிறது. விடை தேடிய போது ஏகலைவன் என்பது தெரிய வருகிறது.

ஏகலைவனை அழைத்த துரோணர் விடயத்தைக் கேட்டறிகிறார். ஆயிரம் துளையிடும் விற்திறன் ஏகலைவனிடம் இருப்பது ஆபத்து என்று உணர்கிறார். திட்டம் தீட்டுகிறார்.

வில்லுக்கு விஜயன் என்பதற்கு மாற்றம் வரக்கூடாது. அதேநேரம் துரியோதனன் தரப்பில் ஏகலைவன் போர் தொடுப்பானாயின் பாண்டவர்கள் வெல்ல முடியாது. ஆகையால் ஏகலைவனின் வலது கரத்து கட்டைவிரலை குருதட்சணையாகப் பெறுவது என துரோணர் தீர்மானித்தார்.

ஏகலைவனும் தன் வலது கரத்து கட்டை விரலை துரோணருக்குக் குருதட்சணையாகக் கொடுக்கின்றான். அந்தோ கொடுமை! தன் மாணாக்கனை வாழ்த்தி ஆசீர்வதிக்கவேண்டிய ஒரு குரு, அவனின் வில் வித்தையை சாகடிப்பது எங்ஙனம் நியாயமாகும்? என்ற கேள்வி ஏற்புடையதாயினும்,

ஒரு தர்மம் வெல்வதற்காக-அதர்மத்தை தோற்கடிப்பதற்காக இப்படியும் செய்துதான் ஆக வேண்டும் என்ற நியாயம் இவ்விடத்தில் அங்கீகரிக்கக் கூடியது.

ஆம், துரோணர் ஏகலைவனிடம் பெற்ற குரு தட்சணை போல இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடந்து கொள்ளாமை மிகப்பெரும் தவறு.

மக்களுக்கு வாக்குறுதி வழங்கி விட்டதற்காக தனக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தை குறைப்புச் செய்தது ஜனாதிபதி மைத்திரி விட்ட மகா தவறு.

ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தை குறைக்காவிட்டால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் அரசியல் பக்கமே திரும்பிப் பார்த்திருக்க மாட்டார்கள்.

இப்போது பிரதமருக்கு அதிகாரம் என்றாகி விட, ஜனாதிபதி மைத்திரியின் பதவியையும் பறிப்போம் என்று பிரசாரம் செய்யும் அளவில் மகிந்த ராஜபக்ஷ தரப்பு வீறாப்புக் கொண்டுள்ளது.

என்ன செய்வது? செய்யக் கூடாததை செய்தால் அது நம்மை வருத்தும்; வதைக்கும் என்பதற்கு ஜனாதிபதி மைத்திரி தனது அதிகாரத்தைக் குறைப்புச் செய்தமை நல்ல உதாரணமாயிற்று.

இனி தீர்ப்பு பொதுமக்களிடமே இருக்கிறது. மக்கள் தீர்ப்பு மகேஸ்வரன் தீர்ப்பாக இருந்தால் எல்லாம் சாதகமாக அமையும். இல்லையேல் மீண்டும் ஒரு பிரளயம் இலங்கையைத் தாக்கவே செய்யும்.

## மன்னாரில் அத்துமீறி குடியேறியோர் மீது நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் கட்டுக்கரைக்குளப் பகுதியிலுள்ள வன ஜீவராசி சரணாலய பகுதிக்குள் அத்துமீறி குடியேறியுள்ள குடும்பங்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வவுனியா மன்னார் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அண்மையில் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் கட்டுக்கரைகுளப் பகுதியில் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான ஒரு பகுதியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு குடும்பங்கள் அத்துமீறி குடியேறியுள்ளதாகவும் இவர்கள் இப்பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என கோரி 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றில் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள வவுனியா மன்னார் சுற்று வட்ட பாதுகாப்பாளர் அதிகாரி எம்.டீ.எல்.லயனலால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன் ஆரம்ப சாட்சியாக வன ஜீவராசி பாதுகாப்பு அதிகாரி ஆர்.ரகுபதி தனது சாட்சியத்தில் மன்னார் கட்டுக்கரைக் குளப் பகுதியில் இச் சரணாலயத்துக்கு என 10 ஆயிரத்து 700 ஏக்கர் இடம் 1938 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி 8356 வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியில் ஆறு குடும்பங்கள் கடந்த 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அத்துமீறி குடியேறியுள்ளனர் என தெரிவித்தார்.

தான் வனஜீவராசி திணைக்களத்தின் பாதுகாப்பாளராக கடமை புரிகின்றேன் என தெரிவித்ததுடன் தனது உத்தியோகபூர்வ அடையாள அட்டையை மன்றில் காண்பித்தார்.

அத்துடன் வர்த்தமானி அறிவித்தலின் பிரதிகளை மன்றில் சமர்ப்பித்த போது எதிர்தரப்பு சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கு இணங்க அடுத்த தவணையின்போது இதன் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மன்றில் தெரிவிக்கப்பட்டது. இவ் வழக்கு மீண்டும் எதிர்வரும் ஓக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-2)

## கிரியெல்ல, சாந்தினியிடம் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

சட்டவிரோத தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு, அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் சாந்தினி கொஹன்காகே ஆகியோரிடம் நேற்று பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இருவரிடமும் கண்டி பொலிஸார் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் ஹெகலிய ரம்புக்வெல்லவிடமும் வாக்குமூலம் பதிவு செய்யபட உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் செய்திக் காணொளிகளை பார்வையிடுவதற்கு நீதிமன்றில் அனுமதி பெற்றுக்கொண்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-12)

## கண்காணிப்பு நடவடிக்கைக்காக ஐரோ.பிரதிநிதிகள் இன்று வருகை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் கண்காணிப்புப் பணிகளுக்காக மூன்று சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஐரோப்பிய சங்கம், பொதுநலவாய நாடுகளின் சங்கம் மற்றும் தெற்காசிய கண்காணிப்பாளர்கள் வலையமைப்பின் பிரதிநிதிகளே இவ்வாறு கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இம்முறை தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக 110 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வரவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கண்காணிப்பு நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும் ஐரோப்பிய சங்கத்தின் பிரதிநிதிகள் இன்று நாட்டுக்கு வருகைதரவுள்ளனர்.

இவர்கள் நாளை செவ்வாய்க்கிழமையளவில் தமது கண்காணிப்புப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர். (செ-12)

## திருச்சி சிறப்பு முகாமில் இருந்து ஈழத்தமிழர்கள் 4 பேர் விடுதலை

திருச்சி சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கை தமிழர்கள் 4 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 19 இலங்கைத் தமிழர்கள் தங்களை விடுவிக்க வலியுறுத்தி சில மாதங்களாக உண்ணாவிரதம், தற்கொலை முயற்சி உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களில் 4 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு கடந்த 11ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

அதனடிப்படையில் சென்னை அம்பத்தூரைச் சேர்ந்த ஈழ நேரு, மதுரை மாவட்டம் திருவாதவூர் முகாமைச் சேர்ந்த உமாரமணன், ஈரோடு மாவட்டம் பவானிசாகர் முகாமைச் சேர்ந்த ரமேஷ், சென்னை ஆழ்வார் திருநகரைச் சேர்ந்த ஜெகன் என்றழைக்கப்படும் ஸ்ரீ ஜெயன் ஆகிய 4 பேர் நேற்றுமுன்தினம் மாலை திருச்சி சிறப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

அவர்களை குடும்பத்தினர், நாம் தமிழர் கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரபு, மனித உரிமை பாதுகாப்பு மைய வழக்கறிஞர் ஆதிநாராயண மூர்த்தி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

விடுதலையான ஈழ நேரு கருத்து வெளியிடுகையில்,

தமிழ்நாட்டில் செய்யாறு முகாமில் 9 பேர், திருச்சி முகாமில் 19 பேர் என 28 இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் செய்யாறிலிருந்த 6 பேர், திருச்சியிலிருந்த 4 பேர் என 10 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த விடுதலையை பெற நாங்கள் பெரும் போராட்டங்களை நடத்த வேண்டி இருந்தது.

சிறப்பு முகாமுக்குள் எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களும் உடல் நலக் குறைவு, மன உளைச்சலால் பாதிக்கப்பட்டு உள்ளனர். குடும்பத்தினருடன் வாழ முடியாமல் அவதிப்படுகின்றனர்.

அவர்களையும் விரைவில் விடுவிக்க வேண்டும் என்றார். (செ-12)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனதின் பத்துப் படிகள்



உடலை இயக்குவது உயிரின் வேலை. அதனைப் பாதுகாத்து, அணு அடுக்குச்சீர்குலையாமல் தடைவரும் போது, அதை உணரும் போது மனமாக விரியும்போது.உணர்ந்த தடையை நீக்க முயல்வது உயிரின் இரண்டாவது வேலையாகும்.தடையால் உணர்ச்சி ஏற்படவே அதனைப் போக்கப் பொருள் அல்லது சூழ்நிலைஅல்லது நட்பு வேண்டும். அப்போது தேவை உருவாகிறது. உணர்ச்சியாக மாறிநிற்பதும் தேவையாக எழுந்து நிற்பதும் உயிர்தான்.

தேவை ஏற்படவே அதைச் சமன் செய்ய முயற்சி தோன்றுகிறது. முயற்சியின்காரணமாகச் செயல் மலர்கிறது. செயலானது இயற்கை ஒழுங்கமைப்பின்படிவிளைவு தருகிறது. விளைவை உயிரானது அனு போகம் ஆகப் பெறுகிறது.அனுபோகத்திலிருந்து இன்ன செயல் செய்தால் இன்ன விளைவு வரும். அதனால்இன்ன அனுபவத்தைப் பெறலாம் என்ற அனுபவத்தை உயிர் பெறுகிறது.

உயிர் மேற்கொள்ளும் ஆராய்ச்சி, அதன்பின் இன்னவிதமான சூழ்நிலையில்இன்னவிதமான உணர்ச்சி தோன்றியதனால் இன்ன விதமாகச் செயற்பட வேண்டும் என்று ஒரு தெளிவினைப் பெறுகிறது. இறுதியாக எல்லாவற்றையும் தொகுத்து ஒருமுடிவினையும் உயிர் செய்து வைத்துக் கொள்கிறது. எனவே, உயிரே உணர்ச்சி,தேவை, முயற்சி, செயல் விளைவு, அனுபோகம், அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு,முடிவு என்ற பத்துக் கட்டமாக உயர்ந்து படர்ந்து நிற்கிறது.

எனவே, உயிரினது படர்க்கை நிலை ஆற்றல் தான் மனம். (Psychic extension of the life energy is mind) எனலாம். உடல் வரையில் இன்ப துன்ப அனுபோகங்களில் குறுகிநில்லாமல் ஆன்மா பற்றியும், இறைவனைப் பற்றியும் ஆராய உயரும் நிலையில்இந்த மனத்தையே அறிவு என்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்கம்பங்கள் நடப்பட்டும் மின்னிணைப்பு வேலைகள் நிறைவுற்றும் மின்சாரமில்லை!

## மன்னாகண்டல் மக்கள் கவலை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மன்னா கண்டல் கிராமசேவையாளர் பிரிவு மக்கள் தமக்கான மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது,

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்தும் நாம் இருட்டிலேயே வாழ்ந்து வருகிறோம்.

எமது கிராமம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தனியான ஒரு கிராமமாக காணப்படுவதோடு சுற்றுச்சூழல் காடாக காணப்படுவதால் காட்டு யானைகளின் தொல்லை காணப்படுகிறது.

அத்தோடு பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்கும் மக்களின் அன்றாட தேவைகளை கருத்தில் கொண்டும் மின்சாரம் தேவையாகவுள்ளது.

எமது பகுதிக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கான மின்கம்பங்கள் நாட்டப்பட்டு இணைப்பு வேலைகள் அனைத்தும் இடம்பெற்று ஏழு மாதங்கள் கடந்தும் எமக்கான மின்சாரத்தினை தற்போது ஆட்சி செய்யும் அரசாங்கம் பெற்றுத்தரவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளிற்கான மின்னிணைப்பு வேலைகள் அனைத்தும் நிறைவு பெற்றும் தமக்கான இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

இதனை உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து விரைவில் மின்னிணைப்பை பெற்றுத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)




## கடற்றொழில் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்திருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். கரையோரப் பகுதிகளில் கடந்த மே மாதம் தொடக்கம் பருவக்காற்று வீசுகின்றமையினாலேயே மீனவர்களின் கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மன்னார் மீனவர்கள் தமது அன்றாட தேவையினை பூர்த்தி செய்வதற்கு மாற்றுத் தொழில் முறைகளை கையாள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிரு க்கின்றனர்.

குறித்த பருவக்காற்று மே மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையிலான சுமார் 6 மாதங்கள் வரையில் கரையோர பிரதேசங்களில் வீசும். தற்போது குறித்த பருவக்காற்றின் வேகம் அதிகரிக்கின்றது. இதனால் குறித்த ஆறு மாத காலங்களிலும் மீனவர்களின் கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிப்படையக் கூடிய சாத்தியங்களே கூடுதலாக காணப்படுகின்றது. இதனால் ஆழ்கடல் தொழிலுக்கு மீனவர்கள் செல்வத்தை தவிர்த்து கரைவலை தொழிலில் அதிக நாட்டம் செலுத்த தொடங்கியிருக்கின்றனர்.(2-9)

# மு/பாளைப்பாணி மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்



(மல்லாவி)

சங்கானை லயன்ஸ் கழகத்தினர் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள மு/பாளைப் பாணிஅ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு சப்பாத்துகள். கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த வாரம் மேற்படி பாடசாலையில் கல்வி கற்கின்ற 13 மாணவர்களுக்கு சப்பாத்துக்கள், கற்றல் உபகரணங்கள் ஆகியவற்றை சங்கானை லயன்ஸ் கழகத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், நிகழ்ச்சி திட்டத்தலைவர் லயன் லேடி மயூரிக்கா, கழக உறுப்பினர்கள் லயன் லக்சன், லயன் அருண்குமார், மாந்தை கிழக்கு பிரதேசத்தின் கலாசார உத்தியோகத்தர், பாடசாலை அதிபர் எஸ்.பாலேஸ்வரன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொளண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் சிறந்த கல்வியைப் பெறுவதன் மூலம்தான் வறுமையை ஒழிக்க முடியும். வறுமையை ஒழிக்க வேண்டும் எனின் நீங்கள் அனைவரும் தடையின்றி சிறந்த கல்வியை பெற வேண்டும். சலிப்பின்றி கற்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (2-15-281)

# ஆற்றங்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு



வவுனியாவில் ஆற்றங்கரையில் இருந்து உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, சிறிராமபுரம் பகுதியிலுள்ள ஆறங்கரையில்உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று வவுனியா பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில்மேலும தெரியவருவதாவது,

குறித்த ஆற்றங்கரை பகுதிக்கு மீன்பிடிப்பதற்காக சென்ற இளைஞர்கள் சிலர் குறித்த பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இருப்பதைக் கண்டு பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலம்மீக்கப்பட்ட இடத்தில்இராணுவத்தால் யுத்த காலத்தின் போது வழங்கப்பட்ட அடையாள அட்டை, தண்ணீர் போத்தல உள்ளிட்டவையும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள என. சடலமாக மீட்கப்பட்டவர் மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த எஸ்.தம்பிரசா (வயது 69) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# கணித பாட ஆசிரியர்களுக்கான வலுவூட்டும் வதிவிட செயலமர்வு

மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் கீழுள்ள பாடசாலைகளில் தரம்-6 தொடக்கம் தரம்11 வரையில் கணித பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களில் தெரிவு செய் யப்பட்ட ஆசிரியர்களுக்கான கணித உபகரண பயன்பாடு தொடர்பாக வலுவூட்டும் வதிவிடச்செயலமர்வு எதிர்வரும் 23,24, 25,26ஆகிய நான்கு தினங்கள் குருதென்னிய கல்வி அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறுமென மத்திய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்(கல்வி பண்பு விருத்தி) எச்.யு.பிரேமதிலக்க அறிவித்துள்ளார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்தொழில்நுட்ப ஆய்வு கூடத்தில் கணித ஆய்வு கூடம் பிரதான இடத்தை வகிக்கின்றது. கணித பாடத்தின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு கணித ஆய்வு கூடம் மற்றும் கணித உபகரணங்கள் தொடர்பாக கணித ஆசிரியர்களிடத்தில் ஆழமான அறிவு அவசியமாகின்றது. ஆகையால் கணித உபகரணப் பயன்பாடு தொடர்பாக கணித ஆசிரியர்களை வலுவூட்டும் செயலமர்வு மேற்படி தினங்களில் ஒரு நாள் கணித முகாம் உள்ளடங்குமாறு நான்கு நாட்கள் வதிவிடசெயலமர்வாக நடை பெறவுள்ளது

கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத் துவதற்காக செயலமர்விற்கு வருகை தருகின்ற ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களுடன் வருகை தரவேண்டும்.

மேலும் தங்குமிடவசதி மற்றும் செயலமர்வு தொடர்பாக மேலதிக விடயங் களை அறிந்து கொள்வதற்கு உதவிக்கல்விப்பணிப்பாளர் (கணிதம்), திரு மதி.தர்சி வைத்தியதிலக்க 0719154349 எனும் தொலை பேசி இலக்கத்து டன் தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## சைவ சமய பாட பரீட்சைக்கு

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

(முல்லைத்தீவு)

விவேகானந்தசபை நடத்தும் அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சை இவ்வாண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

மேற்படி சபையின் 112 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம் பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் இம்மாவட்டங்களில் பரீட்சை பல ஆண்டுகளாக நடைபெறவில்லை. மீண்டும் இம் மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதற்கு சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஆகவே இத்தீர்மானத்துக்கமைய இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

மாணவர் விபரங்கள் வகுப்பு ரீதியாகத் தனித்தனித் தாள்களில் எழுதுவதுடன் பாடசாலையுடன் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களையும் அறியத் தர வேண்டும்.

எமது சபையின் யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான பரீட்சைப் பொறுப்பாளர் ரி.திருஞானசம்பந்தருடன் தொடர்புகொள்வதன் மூலம் தகவல்களைப் பெற முடியும்.

இதற்கான தொலைபேசி இலக்கம் 077 727 9426 என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பரீட்சை நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)



மன்னார் அந்தோனியார்புரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களினால் சிரமதானப் பணியொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்ட போது... (படங்கள்: கரணவாய்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி எம் தூக்கி...

யச் செய்ய அனுமதிக்க முடியாது.

எனது கிராமிய அபிவிருத்தி அமைச்சிற்கு மேலதிகமாக உயர்கல்வி அமைச்சையும் ஜனாதிபதி எனக்கு வழங்கினார்.

நான் சட்டென ஜனாதிபதியிடம் சென்று சொன்னேன், எனக்கு உயர்கல்வி அமைச்சு பதவி வழங்கினால் பல்கலைக்கழகத் தரப்பினர் உங்களை கெட்ட வார்த்தைகளினால திட்டுவார்கள்.

ஏனெனில் நான் குப்பைக் கூடைக்குத் தள்ளி விரட்டிய அனைவரும் ஜனாதிபதியுடன் தான் இருந்தார்கள்.

இதனால் நான் உயர்கல்வி அமைச்சினை ஏற்கவில்லை, அதன் பின்னர் சரத் அமுனுகமவிற்கு இந்த அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உடுநுவர தம்புலகல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (செ-12)

## தேர்தல் முறைப்பாடுகள்...

அதிகபடியான தேர்தல் முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

சுமார் 36 முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## பொலிஸ் அதிகாரியை...

ளான பொலிஸ் உத்தியோகஸ்தர், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12)

## கடந்த மாதம்...

யுடையவை என உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேற்படி சம்பவம் இடத்திற்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதவான் மற்றும் கிளிநொச்சி பொலிஸார் அங்கு விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த வயலின் உரிமையாளர் வயலிற்கு சென்று மருந்து தெளித்துக் கொண்டிருக்கும் போதே துர்நாற்றம் வீசியதை அடுத்து சடலத்தை இனங்கண்டதாக பொலிஸாரிடம் தெரிவித்தார். விசாரணைகளின் பின்னர் சடலத்தை மீட்ட பொலிஸார் அதனை மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,254)

## தண்டவாளத்தை...

இருந்து மாத்தறை நோக்கி செல்லும் புகையிரதம் நேற்று காலை மதவாச்சி புகையிரத நிலையத்தில் தண்டவாளத்தை விட்டு விலகியுள்ளது. இதில் 4 பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகியுள்ளன.

இதன் காரணமாக 10.10 மணிக்கு யாழில் இருந்து சென்ற உத்திரதேவி புகையிரத சேவை வவுனியா புகையிரத நிலையத்தோடு நிறுத்தப்பட்டதுடன் பயணிகளின் பயண கட்டணங்கள் மீளளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழில் இருந்து 1.45 மணிக்கு செல்லவிருந்த குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரத சேவை நிறுத்தப்பட்டது.

இச் சம்பவத்தில் பயணிகள் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் திருத்த பணிகள் நடைபெறுவதோடு தொடர்ந்து புகையிரத சேவைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## இலங்கை-இந்திய..

வலைகளை பயன்படுத்தி மீன்பிடிபபதால் இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் விசைப படகு மீனவர்கள், இலங்கை கடல் பகுதியில் 83 நாள்கள் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு அம்சங்கள் தான பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவதாக உள்ளது. இவற்றை தீர்ப்பதற்கான செயல் முறையை உருவாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நடந்த போரால் இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலை இருந்தது. தற்போது தான் அவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்கின்றனர். இலங்கை மீனவர்கள் பாரம்பரிய முறைப்படிதான் மீன்பிடிக்கின்றனர்.

இரு நாட்டு மீனவர்கள் வாழ்வாதாரமும் பாதிக்கப்படக் கூடாது. எனவே விரைவில் நடக்கவுள்ள நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் உரிய தீர்வு கிடைக்கும் என்றார். (செ-12)


# 31ஆம் நாள்
# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

## அமரர் ஐயாத்துரை வரதராஜா

**(ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர், யாழ்.செயலக திட்டமிடல் பிரிவு)**

**மண்ணில் வாழ்ந்த காலம்:-16.03.1949-20.06.2015**

**திதி:-சதுர்த்தி**



தலைமகனே உங்கள்
கலைமுகத்தை மறப்போமா?
ஜீவநதியாய் நீளுமும்
நினைவலைகள் தாயகத்தே
தீக்கங்குகளாய் சுடர்பரப்பி
ஞானத்தை தேடினவோ?
என் கடன் முடிந்ததென்று
வாணிபதம் பற்றினீரோ?

இன்று (20.07.2015) நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

**59, கலைமகள் வீதி, அரியாலை.**

**குடும்பத்தினர்**
**0772292347**

(1191)

## ஜனாதிபதி தெரிவித்ததை...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்தும் நோக்கில் அதற்கான திட்டங்களை வகுப்பதற்கான விசேட கூட்டம் ஒன்று சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவர் ஜனக பண்டார தென்னக் கோன் தலைமையில் தம்புள்ள யாப்பமகவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில சுதந்திரக் கூட்டமைப்பின் வசமுள்ள தம்புள்ள பிரதேச சபையின் தலைவர் கே.ஜி.சோமதிலகவினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்த கருத்துக் குறித்து கண்டனப் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

அதில், கடந்த 14ஆம் திகதி மாலை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில், பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெரு வெற்றி பெற்று ஆட்சி அமைத்தாலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியை வழங்க முடியாது என தெரிவித்திருந்தார்.

இக் கருத்து சுதந்திரக் கூட்டமைப்பின் ஐக்கியத்தை பிளவுபடுத்துவதாக உள்ளது. கட்சித் தலைவராக இருந்து கொண்டு தேர்தல் நெருங்கும் வேளையில் கட்சியைப் பலப்படுத்துவதை விடுத்து பலவீனப்படுத்தப்படும் செயற்பாடுகளை மேற்கொள்வதாகவே இதைக் கணிக்கவேண்டி உள்ளது.

சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள மூத்த உறுப்பினர்கள் பலரின் கருத்தும் இதையே சுட்டிக் காட்டியுள்ளது. எனவே கட்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட மேற்படி கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் கட்சியின் தேர்தல் பிரசாரக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகளை கட்சித் தலைமை மேற்கொள்ளக் கூடாது எனவும் அவருக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட கருத்தை ஜனாதிபதி உடனடியாக வாபஸ் பெறவேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தை கூட்ட உறுப்பினர்கள் ஆதரித்த நிலையில் அங்கு பேசிய ஜனக பண்டார, சுதந்திரக் கட்சியை ஐக்கியப்படுத்தி பாதுகாக்க சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார். (செ-12)

## உத்தியோகபூர்வ...

கூறியுள்ளார். குருநாகல் கல்கமுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள இரு வாகனங்களை தான் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பயன்படுத்துவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இதனால், அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டுமாயின் அது பற்றி அறிய தருமாறும் அவர் கோரியுள்ளார்.

அரசாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தினால், அதற்காக ஒரு லட்சம் ரூபாயை கட்டணமாக பெறுவது என அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானம் காரணமாக தானும் கட்டணத்தை செலுத்த தயார் என முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார். (செ-12)

## சஜின் வாஸ்...

தன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சஜின் வாஸ் குணவர்த்தன பாரதூரமான சரும நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அப்படியான நோய் எதுவும் அவருக்கு இல்லை என தெரியவந்துள்ளது. இந்த மருத்துவப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை கவனத்தில் எடுத்து கொண்ட நீதிபதி, சஜின் வாஸ் குணவர்தனவை சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து உடனடியாக சாதாரண கைதிகள் இருக்கும் சிறைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். (செ-12)

## நாட்டின் சுதந்திரத்தை இழக்க கூடாது-தேரர்

(கொழும்பு)

மைத்திரி ஆட்சியின் கீழ் நாட்டினுள் உருவாகியுள்ள சுதந்திரத்தை பின்னோக்கி செல்வதற்கு யாருக்கும் சந்தர்ப்பம் வழங்கக் கூடாதென களனி விகாரை விகாராதிபதி கொள்ளுபிட்டியே மகிந்த சங்கரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

களனி விகாரை விகாராதிபதி கொள்ளுபிட்டியே மகிந்த சங்கரகித்த தேரரை சந்திக்க அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று சென்றிருந்தார். இதன்போது சங்கரகித்த தேரர், அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிடம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளும் இதுவரையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## யாழ்.குடாநாட்டில்...

கூடும் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்காக இப்போதிருந்தே விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களின் ஊடாக இரவு பகல் வேளைகளில் வழமையாக நடைபெறும் ரோந்து நடவடிக்கை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தவிர தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறி நடைபெறும் செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர். சட்டத்தினை மீறுபவர்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி ஒட்டப்பட்டுள்ள தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணிகள் தற்போது முழு வீச்சில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார். (செ-12)

## சீனா-இலங்கை...

ர்களுக்கு அழைப்பினை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன வர்த்தக குழு மற்றும் இலங்கை வர்த்தக பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் ஒன்றில் உரையாற்றிய சபையின் தலைவர் நவிண்டா அபயசேகர விடுத்துள்ளார்.

சீன குவாங்டொங் மாகாணத்தில் இருந்து வருகை தந்துள்ள சீன வர்த்தக குழுவினர், இலங்கை வர்த்தக பிரதிநிதிகளுடன் இரு தரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்து விரிவாக ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை வர்த்தக சம்மேளனம், "யுத்தத்திற்குப் பின் மற்றும் தேர்தலுக்குப் பின்" இலங்கை என்ற தொனிப் பொருளிலான கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 3.30 இற்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதான உரை இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவினால் நிகழ்த்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## அரசியல் பயணச்சீட்டு...

எப்பாவல பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை அறிவிக்கவுள்ளது.

இதில் பொது மக்களுக்கு பாரிய நலன்கள் அறிவிக்கப்படும். அதேநேரம் மகிந்த ராஜ பக்ஷவினால் தொடர்ந்து அரசியலில் முன்செல்ல முடியாது. அவரது அரசியல் பயணச்சீட்டு ரத்து செய்யப்பட்டு விட் டது. மக்கள் ஆதரவை அவர் இழந்துள்ள நிலையில் வெற்றி என்பது மகிந்தவுக்கு தொட முடியாத தூரமே என பிரதமர் தெரிவித்துள்ளார். (செ-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பலரது வேண்டுகோளுக்கு அமைய
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
2 ஆம் அணி
யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!

SEGI | B.H.M.S. | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA
அனுமதிகளுக்கு 077 36 16 798
கற்கைநெறி ஆரம்பம் ஜூலை 28 செவ்வாய்
பிரசித்திபெற்ற சுற்றுலா மையங்களுக்கான விசேட பயணம் & யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் நேரடிப் பயிற்சி
SIKARAM Get Set for Careers & Take off Your Dreams
FREE ENGLISH COURSE
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11



வீடு வாடகைக்கு
சகல வசதி வாய்ப்புகளுடன் கூடிய நான்கு அறைகள், சமையலறை, உள்ளக குளியலறை வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
ஐ.தேசிகன்
பிடாரி கோவிலடி,
கொக்குவில்,
ஆனைக்கோட்டை. T.P :-076-5388244
(C-1190)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-1623)


## மகிந்தவுக்கு அதிகார...

வக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசும்போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ புதிய கோஷம் ஒன்றை முன்வைத்துள்ளார்.

நாட்டுக்கு உயிரூட்ட புதிதாக ஆரம்பியுங்கள் என்ற கோஷத்தை அவர் முன்வைத்துள்ளார்.

புதிதாக ஆரம்பிக்க புதியவர் ஒருவர் வேண்டும். எனினும் எந்த விடயமும் புதிதாகவில்லை.

மகிந்த, பசில், நாமல் இந்த ராஜபக்ஷவினரில் எவரும் மாறவில்லை.

ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாசவுக்கு தலைமைத்துவத்தை கொடுத்தார்.

அவர் பிரதமர் பதவியையோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையோ கோரவில்லை.

சந்திரிகா குமாரதுங்கவும் அப்படித்தான்.

பின்னால் வந்து பிரதமர் பதவியை தருமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குமாறும் கோரவில்லை.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக, அரசாங்கத்தின் தலைவராக, அமைச்சரவையின் தலைவராக, முப்படைத் தளபதியாக பதவிகளை வகித்துவிட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக முயற்சித்து வருகிறார்.

இது தெளிவான அதிகாரப் பேராசை என்றே கூறவேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (செ-12)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்
Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.
இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 25.07.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது
Batches Starts On
22.07.2015@10.00am | 27.07.2015@ 9.00am
24.07.2015@ 9.00am | 25.07.2015@10.00am | 01.08.2015@ 9.00am
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422, 0776555677
(C-1625)



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விசேட கட்டண சலுகைகள்

200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-1622)



பாராளுமன்றத் தேர்தல் - 2015

அ. அமிர்தலிங்கம் | ஜி.ஜி. பொன்னம்பலம் | தந்தை செல்வா | சௌ. தொண்டமான் | மு. சிவசிதம்பரம்
தமிழர் விடுதலைக் கூட்டணியை
உருவாக்கிய உத்தமர்களான இவர்களின் இலட்சிய பாதையில்
X 1
4
முதன்மை வேட்பாளர் இ. த. விக்னராசா (முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி)
கா. குலசேகரம்
(C-177)



முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின்
பெற்றோர்/பாதுகாவலர் சந்திப்பு
கடந்த காலங்களில் தமிழ் தேசிய செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி சமூகத்துடன் இணைந்துள்ள சகல முன்னாள் போராளிகள் மற்றும் தடுப்பில் உள்ள அரசியல் கைதிகள் சார்பாக அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அனைவரும் "கௌரவமான எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்துவது" தொடர்பான ஒன்றுகூடலுக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இடம் : நாவலர் கலாசார மண்டப முன்றல்
காலம் : 23-07-2015 (வியாழன்)
நேரம் : பி.ப 3.00
பிரதம செயற்பாட்டாளர்
முன்னாள் போராளிகள்/அரசியல் கைதிகள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.
(C-1630)



நாடாளுமன்றத் தேர்தல் 2015
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க
4

சுரேஷ் க.பிரேமச்சந்திரன்
X 4
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
(C-179)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.